

# பயிற்சி தொகுதி

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைநிகழ்நிலையில் நடைபெறும் வெறுப்புப் பேச்சு, சட்டங்கள் மற்றும் பதிலளிப்பு பொறிமுறைகள்

Centre for Equality and Justice

CitW

© சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (CEJ) இலங்கை.
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.

வடிவமைப்பு : நோ அஸ் ஆர்ட்

அச்சு மற்றும் வெளியீடு : பெப்ரவரி 2023

இந்தப் பதிப்பின் எந்தவொரு பகுதியையும் மீள உருவாக்கவோ, மீளெடுப்பு அமைப்பில் சேமித்து வைக்கவோ அல்லது எந்தவொரு வடிவத்திலோ அல்லது இலத்திரனியல், இயந்திர, புகைப்பட பிரதி, பதிவு செய்யவோ அல்லது முழுமையான நன்றிகூறலின்றி பயன்படுத்தப்படக் கூடாது.

மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:
சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம்
முகவரி: 37/2 எலிபாங்க் வீதி, கொழும்பு 05, இலங்கை.
தொ.பே./தொலைநகல்: +94 11 2055404
மின்னஞ்சல்: srilanka.cej@gmail.com

ISBN 978-624-5847-28-0

# சொற் சுருக்கங்கள்

| | |
|---|---|
| CEDAW | பெண்களுக்கு எதிரான பாரபட்சத்தை ஒழிப்பது தொடர்பான குழு |
| CCID | கணினிக் குற்றங்கள் விசாரணைப் பிரிவு |
| CCU | நிகழ்நிலைக் குற்றங்கள் பிரிவு |
| CID | குற்றவியல் விசாரணைத் திணைக்களம் |
| TFSGBV | தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை |
| DIG | பிரதி பொலிஸ்மாஅதிபர் |
| GBV | பால்நிலை அடிப்படையிலான வன்முறை |
| GOHS | நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்பு பேச்சு |
| IASC | நிலையியற் குழு தொடர்பான இடைநிறுவனம் |
| IBSA | புகைப்படம்சார் பாலியல் துஷ்பிரயோகம் |
| LGBTQI | பெண் சமபாலுறவினர், ஆண் சமபாலுறவினர், இருபாலுறவினர், மாற்றுப்பாலினத்தார், பால்புதுமையர் மற்றும் இடைப்பாலினர் |
| MLA | பரஸ்பர சட்ட உதவி |
| NCII | இணக்கமற்ற நெருக்கமான புகைப்படங்கள் |
| NCPA | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை |
| SGBV | பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை |
| SLCERT | இலங்கை கணினி அவசரகால தயார்படுத்தல் அணி |
| SLMA | இலங்கை மருத்துவ அமைப்பு |
| SOGIESC | பாலியல் தோற்றம், பால்நிலை அடையாளம், பால்நிலை வெளிப்பாடு மற்றும் பால் குணவியல்புகள் |
| UN | ஐக்கிய நாடுகள் சபை |
| UNFPA | ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் |
| WHO | உலக சுகாதார ஸ்தாபனம் |
| WIN | தேவை நாடும் மகளிர் அமைப்பு |

# உள்ளடக்கம


1 அறிமுகம்

2 பின்னணி: தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV), நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சினையும் (GOHS) புரிந்துகொள்ளல்

2.1 பால்நிலை அடிப்படையிலான வன்முறை (GBV) மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (SGBV) என்றால் என்ன?

2.2 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) என்றால் என்ன?

2.3 நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்பு பேச்சு (GOHS) என்றால் என்ன?

2.4 இலங்கையில் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (SGBV) மற்றும் இணைய ஊடுருவலின் பரவல்

2.5 மனித உரிமை மீறல்கள்

3 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV)

3.1 இணக்கம் பெறப்படாத நெருக்கமான புகைப்படம் பகிரல் (NCII) என்பது புகைப்படம் அடிப்படையிலான பாலியல் துஷ்பிரயோகத்திற்கு வழிகோலுகின்றது (IBSA) (‘பழிவாங்கல் ஆபாசப் படம்’ என பொதுவாக அழைக்கப்படும்).

3.2 உருமாற்றம் செய்தல் - மாற்றியமைக்கப்பட்ட புகைப்படங்கள்/காணொளிகள்

3.3 பொதுவாக தீங்கிழைக்கும் நோக்கத்துடன் இணையத்தில் (ஒரு குறிப்பிட்ட நபர்) பற்றிய தனிப்பட்ட அல்லது அடையாளம் காணும் தகவலைத் தேடி வெளியிடல் (Doxxing)

3.4 அச்சுறுத்தி பாலியல் நடவடிக்கையை அல்லது பணத்தை கேட்டல் (ளுநஒவழசவழைெ)

3.5 போலிவிபரங்கள் மற்றும் ஆள்மாறாட்டம் (Fake Profiles and Impersonation).

4 கற்றல் தொகுதியின் குறிக்கோள்

4.1 பிரதான அவதானிப்புகள்

4.2 ஆய்வு

4.3 இலக்குக் குழு கலந்துரையாடல்கள் (FGDs)

4.3.1 இலக்குக் குழு கலந்துரையாடல்கள் (FGD) 1 – பொது நிறுவனங்கள்
4.3.1.1 பால்நிலைப்படுத்தப்பட்ட அணுகுமுறை
4.3.2 இலக்குக் குழு கலந்துரையாடல் (FGD) 2 – சிவில் சமூகம்
4.3.2.1 பால்நிலைப்படுத்தப்பட்ட அணுகுமுறை

5 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) பதிலளிப்பு பொறியமைப்புகள்

5.1 பின்னணி

5.2 இரு - பகுதி அணுகுமுறை

5.3 பேஸ்புக், இன்ஸ்டாகிராம் மற்றும் யூடியூப் என்பன தற்போது தங்கள் தளங்களை தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) பாதுகாப்பாக மாற்றுவதற்குப் பயன்படுத்தும் அறிக்கையிடல் கருவிகளைப் பார்ப்போம்.
5.3.1 பேஸ்புக் (Facebook)
5.3.2 இன்டஸ்டாகிராம் (Instagram)
5.3.3 யூடியுப் (Youtube)

6 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) பாதுகாப்பு பொறியமைப்புகள்

6.1 உன்மோச்சன் (Unmochon)
6.2 2six4 (இலங்கை)

7 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) பல்வேறு வகைகளை எவ்வாறு அடையாளம் காண்பது?

7.1 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) காட்சி சார் அடையாளப்படுத்தல்
7.1.1 இணக்கம் பெறாது அந்தரங்க படங்களை (NCII) பகிரல்
7.1.2 மாற்றியமைக்கப்பட்ட படங்கள்
7.1.3 பொதுவாக தீங்கிழைக்கும் நோக்கத்துடன் இணையத்தில் ஒரு குறிப்பிட்டநபர்) பற்றிய தனிப்பட்ட அல்லது அடையாளம் காணும் தகவலைத் தேடி வெளியிடல் (Doxxing)
7.1.4 அச்சுறுத்தி பாலியல் நடவடிக்கையை அல்லது பணத்தை கேட்டல் (Sextortion)
7.1.5 போலி விபரங்கள் மற்றும் ஆள்மாறாட்டம்

8 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) பதிலளிப்பு

8.1 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) சம்பந்தப்பட்ட சட்டங்கள்

8.1.1.1 குற்றவியல் சட்டத்தின் பிரிவு 285 (திருத்தப்பட்டது)
8.1.1.2 குற்றவியல் சட்டத்தின் பிரிவு 286 மற்றும் பிரிவு 286ஏ (திருத்தப்பட்டது)
8.1.1.3 குற்றவியல் சட்டத்தின் பிரிவு 345
8.1.1.4 குற்றவியல் சட்டத்தின் பிரிவு 372
8.1.1.5 குற்றவியல் சட்டத்தின் பிரிவு 399
8.1.1.6 குற்றவியல் சட்டத்தின் பிரிவு 483
8.1.1.7 1927ஆம் ஆண்டு 4ஆம் இலக்க ஆபாச வெளியீடுகள் கட்டளை

8.2 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) மீதான விசாரணைகளை நடத்தும் நிறுவனங்கள் மற்றும் அதிகார வரம்புகளுக்கு இடையேயான விசாரணைகளுக்கான கருவிகள்

8.2.1 கணினி குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (CCID) என்றால் என்ன?
8.2.2 உள்ளூர் பொலிஸ் நிலையங்கள் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) புகார்களைப் பெற முடியுமா?
8.2.3 பொலிஸ் நிலையத்தில் உள்ள பெண்கள் மற்றும் பிள்ளைகள் உதவிப் பிரிவிற்கு பங்கு உள்ளதா?
8.2.4 விசாரணைகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பை எவ்வாறு பெறுவது?
8.2.5 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் பால்நிலைப்படுத்தப்பட்ட நிகழ்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) தொடர்பாக விசாரித்து நடவடிக்கை எடுக்கக்கூடிய பிற அரசு நிறுவனங்கள் உள்ளதா?

8.3 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) பாதிக்கப்பட்டவர்களை முதல் பதிலளிப்பவர்களாகப் பெறுவதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் பொலிஸாரின் பங்கு

8.3.1 ஆளொருவரின் கண்ணியத்திற்கு சமமாக நடத்தப்படல் மற்றும் மரியாதை
8.3.2 பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்களை உறுதிப்படுத்தவும்
8.3.3 பக்கச்சார்பற்றவராக இருங்கள்: பாதிக்கப்பட்டவர்களையும், தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) உட்பட்டு இருக்க வழிவகுத்த அவரது செயல்களையும் மதிப்பிடாதீர்கள்
8.3.4 பச்சாதாபத்துடன் இருங்கள்
8.3.5 பாரபட்சமற்ற மற்றும் உடனடி விசாரணை: பொருந்தும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் விதிகள்

9 முடிவுரை

10 உசாத்துணைகள்

# அறிமுகம்

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (TFSGBV) பதிலளிக்கும் நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களின் டிஜிட்டல் அறவினை மேம்படுத்தும் நோக்குடன் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தினால் வசதியளிக்கப்பட்ட 4 மாத ஆய்வு செயற்பாட்டின் பெறுபேறாக இந்த கற்றல் தொகுதி உள்ளது. ஜுலை 2025 இல், இந்த தொகுதியைப் புதுப்பிக்கவும் டி.எப்.எஸ்.ஜி.பி.வி(வுகுளுபுடீஏ) சார்ந்த புதிய மேம்பாடுகளைச் சேர்க்கவும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

# 2 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும்பால்நிலை அடிப்படையிலான வன்முறையையும் (TFSGBV) நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சினையும் (GOHS) புரிந்துகொள்ளல்

பரந்தளவில் நோக்கும் போது தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையையும் (TFSGBV) என்பது பாலியல் வன்முறையின் ஒரு வடிவமாகும். நிகழ்நிலையில் முன்னெடுக்கப்படும் பாதிக்கப்பட்டவரின் பால்நிலையின் அடிப்படையில் கணிக்கப்படும். குறிப்பிட்ட பால்நிலையை நோக்கியதாக பக்கச்சார்பாக வெறுப்பு வெளிப்படுத்தப்படும், வெறுப்பு அடிப்படையில் நிகழ்நிலையில் முன்னெடுக்கப்படும் வன்முறையின் ஒரு வடிவமாக நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) என்பது இருக்கின்றது. தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையையும் (TFSGBV) மற்றும் நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) ஆகிய இரண்டும், பால்நிலை அடிப்படையிலான வன்முறை என்ற அமைப்புக்குள் வரும் வன்முறையின் தனித்துவமான வடிவங்களாக உள்ளன. இவையிரண்டும், பாலியல், பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் அம்சங்களை உள்ளடக்கியிருக்கின்றன. அவ்வாறே, தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையையும் (TFSGBV) மற்றும் நிகழ் நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) புரிந்துகொள்வதற்கு, நாம் முதலில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (GBV) மற்றும் பாலியல் அடிப்படை யிலான வன்முறை (SGBV) என்பவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும்.

# 2.1 பால்நிலை அடிப்படையிலான வன்முறை (GBV) மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (SGBV) என்றால் என்ன?

பால்நிலை அடிப்படையிலான வன்முறை (GBV) என புரிந்துகொள்ளப்பட்ட பாரிய வன்முறை அங்கத்தின் ஒரு அங்கமாக பாலியல், பால்நிலை அடிப்படையிலான வன்முறை (SGBV) உள்ளது. குறிப்பிட்ட பால்நிலை அல்லது பால்நிலை சிறுபான்மையினரை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் பல்வேறுச் செயற்பாடுகள் ஊடாக உடல்சார் மற்றும்.்.அல்லது உணர்வுசார் (உளவியல்) தீங்கினை ஏற்படுத்துவது பால்நிலை அடிப்படையிலான வன்முறையாகும். ஐக்கிய நாடுகள் சபையின் நீண்ட காலம் பணியாற்றும் மனிதநேய ஒருங்கிணைப்பு நிறுவனமான நிலையியற் குழு தொடர்பான இடை நிறுவனமானது (IASC) பின்வருமாறு பால்நிலை அடிப்படையிலான வன்முறையை (GBV) விளக்குகின்றது:

“ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையிலான சமூக ரீதியாக அமைக்கப்பட்ட (உ-ம்: பால்நிலை) வேறுபாடுகளின் அடிப்படையிலான, நபர் ஒருவரின் விருப்பத்திற்கு மாறாக இழைக்கப்பட்ட எந்தவொரு தீங்கான செயலையும் குறிப்பிடுவதற்கான பரந்ததொரு பதமாக பால்நிலை-அடிப்படையிலான வன்முறை (GBV) என்பது உள்ளது.”[1]

பால்நிலை அடிப்படையிலான வன்முறை (GBV) வகைகளில் பாலியல் வன்முறை உள்ளடங்குகின்றது. வன்முறை மற்றும் சுகாதாரம் தொடர்பான உலக அறிக்கையில் உலக சுகாதார ஸ்தாபனம் அதனை பின்வருமாறு விளக்குகின்றது:

“உட்பட வீடு மற்றும் வேலையிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தாகவன்றி எந்தவொரு அமைப் பிலும், பாதிக்கப்பட்டவருடனான உறவைப் பொருட்படுத்தாமல் எந்தவொரு பாலியல் செயலும், பாலியல் செயலைப் பெற முயற்சிப்பது, தேவையற்ற பாலியல் கருத்துகள் அல்லது முன்னேற்றங்கள், அல்லது கடத்தலுக்குச் செய்யும் செயல்கள் அல்லது ஒரு நபரின் பாலுணர்வை வலுக்கட்டாயமாகப் பயன்படுத்தி வழிநடத்துதல்,”[2]

பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (SGBV) என்பது, பாதிக்கப்பட்டவரின் அனுமதியின்றி, பாதிக்கப்பட்டவரின் பால்நிலையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் வற்புறுத்தலைப் பயன்படுத்தி, பாதிக்கப்பட்டவரின் மீது பெறப்பட்ட அல்லது பெற முயற்சிப்பது அல்லது செய்ய முயற்சிப்பதாகும். இதில் பாலியல்பு சம்பந்தப்பட்ட விரும்பத் தகாத கருத்துக்கள் அடங்கும். வற்புறுத்தல் என்பதில் பலாத்காரம், மிரட்டல், உளவியல் மிரட்டல், வேலை மறுத்தல்,

---

1. வார்டு ஜெ மற்றும் லப்றினியெர் ஜெ, மனிதாபிமான நடவடிக்கையில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை தலையீடுகளை ஒருங்கிணைப்பதற்கான வழிகாட்டுதல்கள்: ஆபத்தை குறைத்தல், பின்னடைவை ஊக்குவித்தல் மற்றும் மீட்புக்கு உதவுதல். (நிறுவனங்களுக்கு இடையேயான நிலைக்குழு 2015)
2. க்ருக் ஈஜி மற்றும் பலர். (நனள), வன்முறை மற்றும் ஆரோக்கியம் பற்றிய உலக அறிக்கை (உலக சுகாதார அமைப்பு, 2002).

உடல்ரீதியாக தீங்கு விளைவித்தல், குடும்ப உறுப்பினர் அல்லது நெருங்கிய நண்பரை காயப்படுத்துதல் போன்ற பல்வேறு அச்சுறுத்தல்கள் உள்ளடக்கியுள்ளது.

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையையும் (TFSGBV) தனிப்பட்ட மற்றும் பொது இடங்களில் ஏற்படலாம் மற்றும் தெரிந்த நபர்கள் மற்றும் தெரியாத தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையையும் (TFSGBV) என்பது பொதுவாக பெண்களுக்கு எதிரான வன்முறையாகக் கருதப்பட்டாலும், தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையையும் (TFSGBV) ஆண்கள் மற்றும் பெண் சமபாலுறவினர், ஆண் சமபாலுறவினர், இருபாலுறவினர், மாற்றுப்பாலினத்தார், பால்புதுமையர் மற்றும் இடைப்பாலினர் (LGBTQI+) சமூகத்தைச் சேர்ந்த நபர்கள் மீதும் செலுத்தப்படுகிறது. ஒரு சக்தி சமத்துவமின்மையில் நிகழ்நிலை பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (CSGBV) பங்காற்றுகின்றது, அங்கு பாதிக்கப்பட்டவருக்கு குறைந்த சக்தி உள்ளது (அல்லது குழந்தைகள், பெண்கள், அகதிகள், பெண் சமபாலுறவினர், ஆண் சமபாலுறவினர், இருபாலுறவினர், மாற்றுப்பாலினத்தார், பால்புதுமையர் மற்றும் இடைப்பாலினர் (LGBTQI+) சமூகத்தைச் சேர்ந்தவர்கள் போன்ற பெரும்பாலான சூழ்நிலைகளில் சக்தியற்றவர்) என்பதுடன் மற்றும் குற்றமிழைப்பவர் அல்லது ஆக்கிரமிப்பாளரிடம் அதிகாரம் உள்ளது. தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையையும் (TFSGBV) அடிப்படைக் காரணம் ஆணாதிக்கம் என்பதுடன், தலைமுறை தலைமுறையாக வரையறுக்கப்பட்ட பாரம்பரிய பால்நிலை விதிமுறைகள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆணாதிக்கம் மற்றும் ஆணாதிக்க பால்நிலை விதிமுறைகளின் கட்டமைப்பிற்குள் ஆண்களுக்கு வழங்கப்படும் முதன்மையான நிலையின் விளைவாக ஆண்களால் மகிழ்விக்கப்பட்ட மேன்மையின் சக்தியும் உணர்வும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை ஊக்குவிப்பதுடன், தூண்டுகிறது. பொதுவாக, தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையையும் (TFSGBV), பெண்கள் மற்றும் பல்வேறு பாலியல் தோற்றம், பால்நிலை அடையாளம், பால்நிலை வெளிப்பாடு மற்றும் பாலியல் குணவியல்புகளைக் SOGIESC கொண்ட நபர்களைக் கட்டுப்படுத்த அல்லது தண்டிப்பதற்கு இந்த பால்நிலை நியமங்களை நிராகரிக்கும் அல்லது எதிர்த்துப் போரிடும் உயிரியல்ரீதியாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் பாரம்பரியமாக அடையாளம் காணப்பட்ட வகிபாகங்கள் மற்றும் பண்புகளை சுமத்துவதற்காக மேற்கொள்ளப்படுகிறது. இதன் விளைவாக, தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையையும் (TFSGBV)என்பது பெரும்பாலும் பெண்கள் மற்றும் பாலியல் தோற்றம், பால்நிலை அடையாளம், பால்நிலை வெளிப்பாடு மற்றும் பால் குணவியல்புகளைக் (SOGIEC) கொண்ட நபர்களுக்கு எதிராக ஆண்களால் முன்னெடுக்கப் படுகிறது, இருப்பினும், ஆணாதிக்க பால்நிலை விதிமுறைகளை நிலைநிறுத்துவதற்காக பெண்களால் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (SGBV) முன்னெடுக்கப்படும் நிகழ்வுகளும் உள்ளன.[3] எனவே, பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (SGBV) என்பது பெண்கள், பாலியல் மற்றும் பாலியல் தோற்றம், பால்நிலை அடையாளம், பால்நிலை வெளிப்பாடு மற்றும் பால் குணவியல்புகளைக் (SOGIEC) கொண்ட நபர்களுக்கு மற்றும் இந்த பாரம்பரிய கருத்துக்களுக்கு இணங்காத அல்லது பாரம்பரிய நெறிமுறைகளின் மடிப்புகளுக்குள் கொண்டு வரப்பட வேண்டிய பெண்ணிய அலகுகளையும் குறிவைக்கிறது.[4]

---

3 பெண் பிறப்புறுப்பு வெட்டுதல் (FGC) அல்லது பெண் பிறப்புறுப்பு சிதைத்தல் (FGM) என்பது ஆணாதிக்க பால்நிலை கருத்தாக்கங்களை பேணுவதற்காக ஏுபுடீஏ முன்னெடுக்கப்படும் ஒரு சிறந்த உதாரணமாக உள்ளது.

4 SGBV இலிருந்து ஆண்களும் சிறுவர்களும் கூட பாதுகாப்பாக இல்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஆண்களுக்கும் சிறுவர்களுக்கும் இடையே GBV ஏற்படுவதாக IASC அடையாளம் கண்டுள்ளது: “ஆண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான சில வகையான வன்முறைகளின் பால்நிலை பரிமாணங்களை முன்னிலைப்படுத்த சில செயற்பாட்டாளர்களால் ‘பால்நிலை அடிப்படையிலான வன்முறை’ என்ற சொல் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது-குறிப்பாக சில பாலியல் வடிவங்கள். ஆண்மை மற்றும் பெண்மையின் பால்நிலை சமத்துவமற்ற நெறிமுறைகளை வலுப்படுத்தும் வெளிப்படையான நோக்கத்துடன் செய்யப்படும் வன்முறை (எ.கா. ஆயுத மோதலில் எதிரியை ஏமாளி அல்லது பெண்மையாக்குவதை நோக்கமாகக் கொண்ட பாலியல் வன்முறை). ஆண்களுக்கு எதிரான இந்த வன்முறையானது ஒரு மனிதனாக இருத்தல் மற்றும் ஆண் சக்தியைப் பயன்படுத்துதல் என்பதற்கான சமூகக் கட்டமைக்கப்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டது. இது மற்ற ஆண்களுக்கு தீங்கு விளைவிக்க ஆண்களால் (மற்றும் அரிதான சந்தர்ப்பங்களில் பெண்களால்) பயன்படுத்தப்படுகிறது

பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (SGBV) ஆளான பாதிக்கப்பட்டவர்கள், பெண்கள் மற்றும் சிறுமியர் மற்றும் ஆண்கள் மற்றும் சிறுவர்கள், உளவியல் சிக்கல்கள் மற்றும் மனநல நோய்கள், உடல் மற்றும் பிறப்புறுப்புகளில் காயங்கள் போன்ற உடல் காயங்கள் மற்றும் எச்.ஐ.வி-எய்ட்ஸ் மற்றும் பாலியல் ரீதியாக பரவும் தொற்று நோய்கள் போன்ற உடல்நல அபாயங்களுக்கு வழிவகுக்கும் மன அதிர்ச்சிக்கும் ஆளாகிறார்கள். அத்துடன், பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (SGBV) ஆளான பெண்கள் மற்றும் சிறுமிகள் பாதுகாப்பற்ற கருக்கலைப்புகள் (தேவையற்ற கர்ப்பத்தை நிறுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்றன), கர்ப்பத்தால் ஏற்படும் சிக்கல்கள் (குறிப்பாக இளம் பெண்களில்) மற்றும் இனப்பெருக்க அமைப்பில் ஏற்படும் காயங்கள் போன்ற குறிப்பிட்ட உடல்நல அபாயங்களையும் எதிர்கொள்கின்றனர். பாலியல் ஆரோக்கியம் பற்றிய விவாதங்கள் தடைசெய்யப்பட்ட மற்றும் தேசிய சுகாதார அமைப்பு நீட்டிக்கப்பட்ட நாடுகளில், இந்த ஆபத்து காரணிகள் தேசிய சுகாதாரப் பாதுகாப்பு அமைப்பில் கூடுதல் அழுத்தத்தையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மிகவும் கடுமையான ஆபத்தையும் ஏற்படுத்துகின்றன.

## 2.2 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) என்றால் என்ன?

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) என்பது, பாலியல் அர்த்தத்துடன் கூடிய பாலியல், பெண் சமபாலுறவினர், ஆண் சமபாலுறவினர், இருபாலுறவினர், மாற்றுப்பாலினத்தார், பால்புதுமையர் மற்றும் இடைப்பாலினர் (LGBTQI+) வெறுப்பு, சமபாலுறவு வெறுப்பு மற்றும் பெண் வெறுப்பு தாக்குதல்களை தொழில்நுட்பம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன, இது பெரும்பாலும் பெண்கள், சிறுமியர் மற்றும் பல்வேறு பாலியல் தோற்றம், பால்நிலை அடையாளம், பால்நிலை வெளிப்பாடு மற்றும் பால் குணவியல்புகளைக் (SOGIEC) கொண்ட நபர்களை குறிவைக்கிறது. தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) என்பது சமூக ஊடகங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பங்கள் போன்ற இணையக் கருவிகளைப் பயன்படுத்தி ஒரு நபரை துன்புறுத்துதல், கொடுமைப்படுத்துதல், அவமானப்படுத்துதல், பயமுறுத்துதல், வற்புறுத்துதல் அல்லது ஏதோவொரு வகையில் தீங்கு விளைவிப்பதன் மூலம் சமூக ஊடகங்கள் அல்லது தகவல் தொழில்நுட்பத் தொடர்பு அமைப்புகள் மூலம் குறிப்பிட்ட நபரை குறிவைத்து செயல்படுவதாகும்.

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) செயல்பாட்டில் மூன்று முக்கிய வகையான டிஜிட்டல் தளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) ஒத்திசை அல்லது 'பொத்தான' (analog or 'button') தொலைபேசிகள் மூலமாகவும், துன்புறுத்தல் அல்லது அச்சுறுத்தும் அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகள் மூலமாகவும் கூட நிகழ்த்தப்படக்கூடும். இவை சமூக வலைப்பின்னல்கள், ஊடக பகிர்வு தளங்கள் மற்றும் செய்தியிடல் தளங்கள் ஆகும். சமூக வலைப்பின்னல் என்பது பேஸ்புக் போன்ற தளங்கள் ஆகும், அவை மக்களுடன் தொடர்பு கொள்ளவும், தகவல், யோசனைகள் மற்றும் அறிவைப் பகிரவும், ஊடக பகிர்வு தளங்கள் புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் போன்ற ஊடக உள்ளடக்கத்தைப் பகிரவும் பயன்படுத்தப்படுகின்றன, எடுத்துக்காட்டாக இன்ஸ்டாகிராம். அதேநேரம் செய்தியிடல் தளங்கள், எடுத்துக்காட்டாக, வட்ஸ்அப், முதன்மையாக ஒருவருக்கொருவர் தொடர்புகொள்வதற்குப் பயன்படுத்தப்படுவதுடன், இது குறுஞ் செய்திகளை அனுப்புவதற்கும் பெறுவதற்கும், குரல் மற்றும் காணொளி அழைப்புகளை ஏற்படுத்துவதற்குமான வசதியை வழங்குகிறது.

எனவே, தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) என்பது, எந்தவொரு இணக்கமற்ற பாலுறவுச் செயலைச் செய்வதற்கும் அல்லது பாலியல்செயலைப் பெறுவதற்கும் அல்லது பெறுவதற்கு முயற்சிப்பதற்கும், பாதிக்கப்பட்டவரின் பால்நிலையின் அடிப்படையில், கட்டாயப்படுத்துவதன் மூலம் டிஜிட்டல் வழிமுறைகளைப் (ஒரு டிஜிட்டல் தளம்) பயன்படுத்துவதாகும். இந்தச் செயலின் நோக்கம் பழிவாங்குதல், பாதிக்கப்பட்டவரை (பெரும்பாலும் ஒரு பெண்) கட்டுப்படுத்துதல், அவமானம், பயம் போன்றவற்றை ஏற்படுத்துதல் என்பது வரை வேறுபடலாம்.[5] பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையைப் (SGBV) போலவே, தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) தொடர்பான குற்றவாளிகள் பாதிக்கப்பட்டவருக்குத் தெரிந்த ஒருவராக அதாவது நெருங்கிய நண்பர், உறவினர், நெருங்கிய பங்குதாரர், முன்னாள் நெருங்கிய பங்குதாரர், சக நண்பர் அல்லது தெரியாத ஒருவராக இருக்கலாம்.[6]

உதாரணமாக, தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) என்பதில் மின்னஞ்சல் அல்லது சமூக ஊடகம் (இணையத்தில் அந்நியர்களுக்கு ஆபாசமான படங்களை அனுப்புவதை உள்ளடக்கிய குற்றம்) மூலம் பாலியல் அர்த்தங்கள் அல்லது வெளிப்படையான பாலியல் செய்திகளுடன் விரும்பத்தகாத செய்திகளை அனுப்புவதை உள்ளடக்கியது, சமூக ஊடகங்கள், தகவல் தொடர்பு பயன்பாடுகள் அல்லது குறுஞ்செய்தி மூலம் பாலியல் இயல்புடைய விரும்பத்தகாத செய்திகளை அனுப்புதல் (கைபேசி மூலம் வெளிப்படையான பாலியல் புகைப்படங்கள் அல்லது செய்திகளை அனுப்பும் செயல் அல்லது நடைமுறை), பாலியல் தன்மை கொண்ட நெருக்கமான புகைப்படங்கள் அல்லது நிர்வாணப் புகைப்படங்களை அனுமதியற்ற வகையில் பகிரல் (புகைப்படம் அடிப்படையிலான பாலியல் துஸ்பிரயோகம்), மற்றும் இலக்கு வைக்கப்பட்ட நபரைத் துன்புறுத்துவதற்கும், கொடுமைப்படுத்துவதற்கும், அவமானப்படுத்துவதற்கும் மற்றும் அச்சுறுத்துவதற்கும் பாலியல் இயல்புக்கான செயல்பாடுகளைப் பயன்படுத்து வதற்காக போலி சுயவிவரங்களை உருவாக்குதல்.[7]

## 2.3 நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்பு பேச்சு (GOHS) என்றால் என்ன?

நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) என்பது தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) என்ற பெரும்பிரிவுக்குள் வருகிறது, இது பால்நிலை அடிப்படையிலான வன்முறை (GBV) என்பதற்குள் வருகிறது. நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) என்பது எழுத்து, பேச்சு அல்லது நடத்தை ஊடாக வெளிப்படுத்தப்படும் தகவல்தொடர்பு ஆகும், இது ஒரு நபர் அல்லது நபர்களின் குழுக்களை இழிவான, அவமானகரமான மற்றும் தீங்கு விளைவிக்கும் வகையில் அவர்களின் இனம், மதம், பால்நிலை அல்லது வேறுபடுத்தும் மற்றும் வித்தியாசப்படுத்தும் அம்சத்தின் காரணமாகத் தாக்குகிறது.

பாலியல் மற்றும்/அல்லது பால்நிலை அடையாளத்தின் அடிப்படையில் ஒரு நபர் அல்லது குழுவிற்கு எதிராக இழிவுபடுத்துதல், அவமானப்படுத்துதல் மற்றும்/அல்லது வெறுப்பு அல்லது வன்முறையை தூண்டுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட நடத்தைசார், வாய்மொழிசார் அல்லது எழுதப்பட்ட

---

5 'பால்நிலை அடிப்படையில் தனிநபர்களுக்கு இடையேயான இணையதள மூலமான குற்றம்" (UNODC, பிப்ரவரி 2020) <https://www.unodc.org/e4j/en/cybercrime/module-12/key-issues/gender-based-interpersonal-cybercrime.html> mZfg;gl;lJ 05 மார்ச் 2023

6 ibid

7 ibid

வெளிப்பாடுகள் நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) ஆகும். இந்த ஆணாதிக்க சமூகத்தில் ஆண்களால் (மற்றும் சில பெண்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட) பால்நிலை விதிமுறைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் மற்றும் அதிகாரம் மற்றும் மேன்மை உணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் பெண்கள் மற்றும்.∴அல்லது பாலியல் மற்றும் பல்வேறு ளுழுபுஐநுஊஇணைக் கொண்ட நபர்கள் மீதான வெறுப்புதான் நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) அடிப்படைக் காரணமாகும். இலங்கையில், பாலியல் தொழிலாளர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், பெண் அரசியல்வாதிகள், பெண்கள் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் பொது இருப்பைக் கொண்ட பிற பெண்கள் மற்றும் பெண்ணியவாதிகள் நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேசசின் (GOHS) இலக்குகளாக இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.
பெரும்பாலான நேரங்களில் இந்த 'வெறுப்பு' பெண் வெறுப்புத்தன்மை கொண்டது மற்றும் இந்த பெண்கள் பால்நிலை விதிமுறைகளை கடந்து செல்கிறார்கள் என்ற எண்ணத்திலிருந்து பெறப்பட்டதாகவும் இருக்கின்றது: பாலியல் முகவர் மற்றும் பால்நிலை நிலைப்பாட்டிற்கான பொது கண்டனம் ஆகியவை பொதுவாக வெறுப்பு பேச்சு பிரசாரங்களால் முன்னெடுக்கப்படுகின்றன. பெண்கள் மற்றும் சிறுமிகள் மற்றும் பல்வேறு பாலியல் தோற்றம், பால்நிலை அடையாளம், பால்நிலை வெளிப்பாடு மற்றும் பால் குணவியல்புகளைக் (SOGIEC); கொண்ட நபர்களை தாக்குவதற்கான ஆயுதமாகப் பயன்படுத்தப்படுவது மாத்திரமன்றி, முழு இன மற்றும் மத குழுக்களையும் தாக்குவதற்கான ஆயுதமாக நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) பயன்படுத்தப்படுகிறது. தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கு எதிராக இன மற்றும் நெறிமுறைப்படுத்தப்பட்டதாக நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) பதிலளிப்புகள் இலங்கையில் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. இந்தத் தாக்குதல்கள் பெரும்பாலும் இந்த இன மற்றும்.∴அல்லது மதக் குழுக்களின் பெண் உறுப்பினர்களுக்கு எதிராகத் தொடங்கப்படுகின்றன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS), குறிப்பாக உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்குப் பின்னரான அண்மைய காலங்களில், பெண்களின் உடல் மற்றும் பெண் பால்நிலை (உதாரணமாக, ஹிஜாப் அணிவது, கொத்துரொட்டியில் கருத்தடை மாத்திரைகள், பெண் உள்ளாடைகளால் கருத்தடை ஏற்படல் போன்றவை) மீது தாக்குதல் நடத்தப்படுவதை ஒருவர் கவனிக்கலாம். இது போன்ற சூழ்நிலைகளில், நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) என்பது தனிநபரின் உடல் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதுடன் மாத்திரமன்றி, நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சுக்கு (GOHS) ஆளான தனிநபர் அல்லது பெண் உருவத்தால் அடையாளப்படுத்தப்படும் நபர்களின் முழு குழுவும் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு ஆளாகின்றனர். எடுத்துக்காட்டாக, ஹிஜாப் அணிந்துள்ள முஸ்லிம் பெண்களின் உருவப் படங்கள் (மீம்ஸ்) சமூக ஊடகங்கள் மூலம் பரப்பப்படும் போது, அது ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் மீது வெறுப்பையும் சந்தேகத்தையும் தூண்டுகிறது, ஆனால் முஸ்லிம் பெண்கள் மீது உண்மையான தீங்கு விளைவிக்கும் அபாயத்தையும் வெளிப்படுத்துகிறது.

நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) என்பது தீங்கிழைக்கும் பேச்சு என்று பலர் கருதினாலும், நிகழ்நிலை வெளிப்பாடு மற்றும் நிகழ்நிலைக்கு வெளியிலான வன்முறை ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு நன்கு நிறுவப்பட்ட சூழலில், நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்பு பேச்சு (GOHS) என்பது உண்மையில் நிகழ்நிலைக்கு அப்பாலான இடத்தைக் கடக்கும் திறன் கொண்டதாகும். இது டிஜிட்டல் தளங்கள் வழியாக, மத அல்லது இனக்குழுக்கள் அல்லது பால்நிலை சிறுபான்மையினருக்கு எதிராக வெறுப்பு மற்றும் அவமானத்தை ஏற்படுத்துகிறது, இந்த மத அல்லது இனக்குழுக்கள் மற்றும் பல்வேறு பாலியல் தோற்றம், பால்நிலை அடையாளம், பால்நிலை வெளிப்பாடு மற்றும் பால் குணவியல்புகளைக் (SOGIEC) கொண்ட நபர்களுக்கு எதிராக மக்களைத் தூண்டுகிறது, இதன் மூலம் நிகழ்நிலை வெறுப்பூட்டும் பேச்சின் உடல் வெளிப்பாடு எளிதாகின்றது.

## 2.4 இலங்கையில் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (SGBV) மற்றும் இணைய ஊடுருவலின் பரவல்

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில், வன்முறைக் கலாசாரம் பரவியிருப்பது மன்னிக்க முடியாதது. ஆண்மை மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பில் 2013ஆம் ஆண்டில் இலங்கையின் கெயார் இன்டர்நெஷனல் முன்னெடுத்த ஆய்வில் பெரும்பாலான ஆண்கள் ஆண்மை ஆதிக்கம் மற்றும் வன்முறையுடன் தொடர்பு படுத்துகின்றனர் என கண்டறிந்தது. ‘கடினமாக’ இருப்பது ஆண்மை என்று புரிந்து கொள்ளப்பட்டது எனவும் ஆண் மற்றும் பெண் இருபாலராலும், ஆண்பால் வன்முறையையும், ஆண் சக்தியைப் பயன்படுத்துவதை அதிக அளவில் ஏற்றுக்கொள்வதையும் அந்த ஆய்வு கண்டறிந்தது. ஆண்மையின் இந்த பொதுவான ஏற்றுக்கொள்ளல் ஆதிக்கம் மற்றும் வன்முறையால் வரையறுக்கப்படுவதுடன், இலங்கையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நிகழ்வதற்கான அடித்தளமாகவும் இது உருமாறி பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (SGBV) வழிவகுக்கிறது. அதனைத் தவிர, பல ஆண்டுகால யுத்தமானது இன-தேசியம், இன மற்றும் மத சமூகங்களின் துருவமுனைப்பு மற்றும் சமூகத்தின் இராணுவமயமாக்கல் ஆகியவற்றின் உருவாக்கத்திற்கு வழிகோலியுள்ளதுடன், இன மத அடையாளம், சாதி மற்றும் வர்க்கம் ஆகியவற்றின் குறுக்குவெட்டுகளுடன் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (SGBV) தீவிரத்தை மேலும் அதிகரித்துள்ளது.

இலங்கை கெயார் இன்டர்நெ‘னல் நடத்திய ஆய்வில், 18-49 வயதுடைய ஆண்களில் 20மூ பேர் தங்கள் நெருங்கிய துணை மீது பாலியல் வன்முறையில் ஈடுபட்டதாக ஒப்புக்கொண்டுள்ளனர், அதேவேளை, 6.2மூ ஆண்கள் துணையல்லாதவர்களை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாக ஒப்புக்கொண்டுள்ளனர். இலங்கையில் பொது மற்றும் தனியார் இடங்களுக்குள் பெண்கள் மற்றும் பிற பெண்ணிய உடல்கள் மீதான முறையான பாலுறவு, புறநிலைப்படுத்தல், மீறல் மற்றும் துன்புறுத்தல் ஆகியவையும் தெளிவாகத் தெரிகிறது. 2017இல் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் (UNFPA) நடத்திய கணக்கெடுப்பின்படி, 90மூ பெண்கள் மற்றும் சிறுமிகள் பொது போக்குவரத்தில் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர், அதே நேரத்தில் 15 வயதுக்கு மேற்பட்ட பெண்களில் 4 பெண்களில் 1 பெண் (24.9மூ) தெரிந்த அல்லது தெரியாத நபர் மூலம் பாலியல் வன்முறைக்கு ஆளாகியுள்ளார். பெண்களை இலக்கு வைத்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (SGBV) என்பது சமூகத்தின் எந்தத் துறையிலும் தப்பவில்லை என்பதை பல ஆண்டுகளாக நடத்தப்பட்ட பல ஆய்வுகள் நிரூபித்துள்ளன. 2011இல் இலங்கை மருத்துவ அமைப்பினால் (SLMA) நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், பெருந் தோட்டத் துறை, சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் கைத்தொழில் துறையில் உள்ள பெண்கள் பணியிடத்தில் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (SGBV) உட்பட்டுள்ளனர் என்று கண்டறிந்ததுடன், இலங்கையில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் (அரசப் பல்கலைக்கழகங்கள்) நடத்தப்பட்ட ஆய்வில் பெண்கள் மற்றும் ஆண் மாணவர்கள் பல்கலைக்கழக கட்டமைப்பிற்குள் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (SGBV) உட்பட்டவர்களாக இருந்ததுடன், பகிடிவதை வடிவத்தில் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (SGBV) என்பது தெளிவாக இருந்தது.

9 டி மெல் என், பீரிஸ் பி மற்றும் கோமஸ் எஸ், ‘பாலினத்தை விரிவுபடுத்துதல்: ஆண்மைகள் ஏன் முக்கியம்?: இலங்கையின் நான்கு மாவட்டங்களில் அணுகுமுறைகள், நடைமுறைகள் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை’ (கேர் இன்டர்நேனல் ஸ்ரீலங்கா, 2013).

10 ibid

பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை (SGBV) நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் இந்த ஆணாதிக்கம் மற்றும் வன்முறை கலாசாரத்திற்குள், தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையானது (TFSGBV) பெரும்பான்மையான மக்கள் இணையத்தை அணுகுவதன் மூலம் எளிதாக்கப்படுகிறது. 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கையின் இணைய ஊடுருவல் விகிதம் மொத்த மக்கள்தொகையில் 56.3மூ ஆக காணப்பட்டது. ஜனவரி 2023 மற்றும் ஜனவரி 2024 க்கு இடையில் இலங்கையில் இணைய பயனாளர்கள் 460,000 (+3.9%) ஆல் அதிகரித்துள்ளதாக கெபியோஸ் (Kepios) பகுப்பாய்வு சுட்டிக்காட்டுகின்றது. மேலும், இலங்கையிலும், உலகளாவிய ரீதியில் அவதானிக்கப்பட்டுள்ளபடி, கொவிட்-19 தொற்றுநோயின் விளைவாக ஏற்பட்ட பொது முடக்கங்களானது இணையம் மற்றும் சமூக ஊடகங்களின் அதிக பயன்பாட்டிற்கு வழிவகுத்தது, இது திறன்கைபேசி பயன்பாட்டை விரைவாக ஏற்றுக்கொள்வதன் மூலம் ஆதரிக்கப்படுகிறது. இலங்கையில உள்ள சமூக ஊடக பாவனையாளர்களில் 98.8மூ பேர் திறன்கைபேசிகள் மூலம் இதனை அணுகுவதாகவும், பதிவு செய்யப்பட்ட 8.20 மில்லியன் சமூக ஊடக பயனர்களில் 36.6மூ பெண்கள் மற்றும் 63.4மூ ஆண்கள் எனவும் டேட்டாரிப்போர்ட்டல் (DataReportal) தெரிவித்துள்ளது. இலங்கையில் 32.29 மில்லியன் கைபேசி இணைப்புகள் உள்ளன, இது மக்கள் தொகையில் 149.9மூ ஆகும், இது கைபேசி எண் பெயர்வுத்திறன் கிடைக்காததன் காரணமாக ஒரு நபர் ஒன்றுக்கு மேற்பட்ட கைபேசி இலக்கங்களை (சிம்களை) வைத்திருப்பதைக் குறிக்கிறது.

திறன்கைபேசி பயன்பாட்டில் இந்த விரைவான அதிகரிப்பு தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையில் (TFSGBV) குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காண்கிறது. தரவு பாதுகாப்பு தொடர்பான அறிவின்மை (data protection) இளைஞர்களிடையே அதிகரித்த திறன்கைபேசி பயன்பாடு மற்றும் நிகழ்நிலைக் குற்றங்கள் மீதான கட்டுப்பாடு இல்லாமை போன்ற காரணிகளுடன் இணைந்து தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) அதிகரிப்புக்கு வழிவகுத்தது. சம்மதம் இல்லாது அந்தரங்கப் படங்களைப் பகிர்தல், பாலியல் பலாத்காரம், மாற்றியமைக்கப்பட்ட படங்கள் மற்றும் ஆழமான போலிகள் மற்றும் சமூக ஊடக கணக்கு ஆள்மாறாட்டம் ஆகியவை இலங்கையில் காணப்படும் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) மிகவும் பொதுவான வடிவங்களாக இருப்பதுடன், பேஸ்புக், இன்டஸ்ராகிராம் மற்றும் செய்தி பகிரல் செயலியான வட்ஸ்அப் போன்ற தளங்களில் இவை முக்கியமாக நிகழ்கின்றன.

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) மற்றும் அதன் தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்துள்ள போதிலும், டிஜிட்டல் கல்வியறிவில் வெளிப்படையான இடைவெளிகள், பெண்களுக்கு எதிரான வன்முறையை இயல்பாக்குதல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களைக் குற்றம் சாட்டும் கலாசாரம் ஆகியவை சிக்கல்களை தணிக்கும் முயற்சிகளில் பெரும்பகுதியை மறைத்துவிட்டன. நாடு முழுவதும் உள்ள இளைஞர்கள், பாடசாலை வயதுடையவர்களிடையே தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) என்பது அதிக அதிர்வெண்களில் தொடர்கிறது, இது ஆபத்தான முறையில், நிகழ்நிலையில் குழந்தைகளின் பாலியல் சுரண்டலுடன் எவ்வாறு மேலெழுகிறது என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) என்பது இலங்கையில் மிக வேகமாக வளர்ந்து வரும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் வடிவமாகும் 15, இதில் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் மிக முக்கியமாக இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். 2000 ஆம் ஆண்டு தேவை நாடும் பெண்கள் அமைப்பு (Women in Need) நடத்திய ஆய்வில், மூன்றில் ஒரு பெண் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) சில வடிவங்களில் பாதிக்கப் பட்டவர் என்று கண்டறியப்பட்டது, இது நிகழ்நிலை மற்றும் நிகழ்நிலைக்கு அப்பாலான வன்முறைகள் ஒருவருக்கொருவர் எவ்வளவு

நெருக்கமாக பிரதிபலிக்கிறது மற்றும் பொதுவான பால்நிலை விதிமுறைகளிலிருந்து வெளிவருகிறது என்பதற்கான சான்றாகும். அரச பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சு, வேர்ல்ட் விஷன் மற்றும் சேவ் தி சில்ட்ரன் ஆகியவற்றின் இணைந்த தேசிய ஆய்வில், குறைந்தது 28மூ குழந்தைகள் சில வகையான இணைய வன்முறைகளை அனுபவித்துள்ளனர், இதில் ‘அநாகரீகமான செய்திகளை’ வெளிப்படுத்துவதும் அடங்கும், அதே நேரத்தில் 20மூ குழந்தைகளின் ‘அநாகரீகமான‘ படத்தை அவர்களது அனுமதியின்றி இணையத்தில் பகிர்ந்துள்ளனர்.[16]

அதிகரித்து வரும் டிஜிட்டல் ஊடுருவல், புதிய இணையதளங்களின் பயன்பாடு - மற்றும் மிக அண்மையில், கொவிட்-19 தொற்றுநோய் பரவல் போன்றவற்றின் பின்னணியில், சட்ட அமுலாக்க நிறுவனங்கள் அதிகரித்து வரும் எண்ணிக்கையுடன் தொடர முயற்சிப்பதால், தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) பதிவு செய்யப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை பல ஆண்டுகளாக படிப்படியாக உயர்ந்துள்ளது.[17] 15 வயது சிறுமி ஒருவரின்[18] இணைய வழி சிறுவர் கடத்தல் தொடர்பான கடுமையான சம்பவத்திற்கு பதிலளிக்கும் வகையில், இணைய சிறுவர் பாலியல் சுரண்டல் உள்ளடக்கத்தை[19] கையாள்வதற்கான சிறப்புப் பிரிவை அமுலாக்க வழிமுறைகளில் அண்மையில் சேர்த்தமை இதில் உள்ளடங்கும். வட்ஸ்அப் மற்றும் டெலிகிராம் போன்ற செய்தியிடல் பயன்பாடுகள் பிரபலமாகி வருகின்ற நிலையில், துரதிஷ்டவசமாக, ஒருமித்த நெருக்கமான படங்கள் மற்றும் காணொளிகளைப் பகிர்வதற்கான விரிவான, இரகசிய வலையமைப்புக்களை அனுமதித்துள்ளது. பாடசாலை செல்லும் மாணவர்களிடையே இத்தகைய வலையமைப்புக்களின் குறிப்பிட்ட பரவலானது நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது, அங்கு இளம் சிறுவர்கள் சேருகிறார்கள் மற்றும் பொதுவாக சக நண்பர்களின் அழுத்தம் காரணமாக பங்கேற்கிறார்கள் மற்றும் முறையாக அவர்களின் பெண் நண்பர்களை குறிவைக்கிறார்கள். இந்த ‘கசிந்த’ உள்ளடக்கத்தில் தோன்றும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அவமானத்தை ஏற்படுத்தும், இழிவு மிக்கதாக சமூக ஊடகங்களிலும் பரவலாக உள்ளது. சமூகத் தரங்களைத் தவிர்த்து, பாதிக்கப்பட்டவர்களைத் துன்புறுத்துவதற்கான ஆக்கப்பூர்வமான வழிகளைக் கண்டறிய சமூக ஊடகப்பயனர்களுக்கு மீம் கலாசாரம் பெருகிய முறையில் பொதுவான வழியாகிவிட்டது. மேலும், சமூக ஊடகங்கள் மற்றும் பிற டிஜிட்டல் கருவிகளும் ஒரு தளத்தை வழங்குகின்றன, சில சந்தர்ப்பங்களில் அநாமதேயத்தால் அவை பாதுகாக்கப்படுகின்றன, வெறுக்கத்தக்க பேச்சு பெண்ணை ஒரு பொருளாக அல்லது பெண் சமபாலுறவினர், ஆண் சமபாலுறவினர், இருபாலுறவினர், மாற்றுப்பாலினத்தார், பால்புதுமையர் மற்றும் இடைப்பாலினர் (LGBTQI+) சமூகத்திற்கு எதிராக கட்டவிழ்த்து விடலாம்.

15 குணசேகர டி, "ஆன்லைன் பால்நிலை அடிப்படையிலான வன்முறை: பாலியல் துன்புறுத்தலின் புதிய இயல்பு” (தி மார்னிங், 28 பிப்ரவரி 2021) <https://www.themorning.lk/articles/121936> mZfg;gl;lJ 05 khu;r; 2023

16 சேவ் தி சில்ட்ரன் மற்றும் பலர்., இலங்கையில் குழந்தைகளுக்கு எதிரான ஆன்லைன் வன்முறை (மார்ச் 2022)<https://srilanka.savethechildren.net/sites/srilanka.savethechdren.net/files/Online%20Violence%20Against%20Children%20in%20Sri%20Lanka.pdf> அணுகப்பட்டது 05 மார்ச் 2023.

17 சாமர எஸ் ‘பாதுகாப்பற்ற பொதுவெளி மற்றும் பாதுகாப்பற்ற இணையதளம்’ த மொர்னிங்இ 13 மார்ச் 2022) <https://www.themorning.lk/unsafe-outside-unsafe-online> அணுகப்பட்டது 05 மார்ச் 2023.

18 பொன்சேகா பி, ‘குழந்தைகளின் ஆன்லைன் பாலியல் சுரண்டலின் வளர்ந்து வரும் ஆபத்துகள்’ (கிரவுண்ட் வியுஸ், 20 நவம்பர் 2021)<https://groundviews.org/2021/11/20/the-growing-dangers-of-online-sexual-abuse-of-children/> அணுகப்பட்டது 05 மார்ச் 2023.

19 ஹப்புஆரச்சி, ப, 2021. ‘சிறுவர் ஆபாச் படங்களை தடுப்பதற்கான விசேட பொலிஸ் பிரிவு’ (நேறளகசைளவஇ 29 ஜூலை 2021) <https://www.newsfirst.lk/2021/07/29/special-police-unit-to-crack-down-on-child-pornography/, அணுகப்பட்டது 05 மார்ச் 2023.

## 2.5 மனித உரிமை மீறல்கள்

பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (SGBV) என்பதும் மனித உரிமைகளின் மிகவும் கடுமையான மீறல் என்பதை அங்கீகரிப்பதும் முக்கியமாகும். பல சர்வதேச உடன்படிக்கைகள் உயிர் வாழ்வதற்கான உரிமை, மனிதாபிமானமற்ற அல்லது இழிவாக நடத்தப்படல் அல்லது தண்டனையில் இருந்து விடுபடுவதற்கான உரிமை, பால்நிலை, இனம், அரசியல் கருத்து அல்லது பாலியல் நோக்குநிலை (மற்றவற்றில்) ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டாத உரிமைகள், சட்டத்தின் பாதுகாப்பு, சுதந்திரமாக வெளிப்பாட்டுக்கான உரிமை மற்றும் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கைக்கான உரிமை என்பவற்றை மனித உரிமைகளாக அங்கீகரித்துள்ளன. உடல் காயங்கள், உளவியல் அதிர்ச்சி, தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) மற்றும் நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) விளைவாக மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (SGBV) காரணமான பாதிக்கப்பட்ட பெண்களின் மீதான பாரபட்சம் என்பனவும் ஐக்கிய நாடுகள், ஐரோப்பிய பேரவை, மற்றும் ஏனைய பிராந்திய மனித உரிமைகள் பாதுகாப்பு கட்டமைப்புக்களால் இந்த மனித உரிமைகளின் மீறல்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மற்றவற்றுடன், பெண்களின் உயிர் வாழ்வதற்கான உரிமை, சித்திரவதை அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தை அல்லது தண்டனையிலிருந்து சுதந்திரம், விடுதலை மற்றும் நபரின் பாதுகாப்பிற்கான உரிமை என்பவற்றை பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (SGBV) மீறுகிறது என்று பெண்களுக்கு எதிரான எல்லாவித பாகுபாடுகளையும் இல்லாதொழிப்பதற்கான குழு (CEDAW) திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளது. பெண் சமபாலுறவினர், ஆண் சமபாலுறவினர், இருபாலுறவினர், மாற்றுப்பாலினத்தார், பால்புதுமையர் மற்றும் இடைப்பாலினர் (LGBTQI+) சமூகத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையானது (SGBV) அவர்களின் மனித உரிமைகளை மீறுவதாக ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்துள்ளது. சர்வதேச சட்டக் கடமைகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பின் மூலம் அரசாங்கத்தின் மீது செலுத்தப்படும் ஒரு கடமை மற்றும் பொறுப்பு, பெண்களின் உரிமைகள் மற்றும் அதேபோன்று பெண் சமபாலுறவினர், ஆண் சமபாலுறவினர், இருபாலுறவினர், மாற்றுப்பாலினத்தார், பால்புதுமையர் மற்றும் இடைப்பாலினர் (LGBTQI+) நபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை அரசாங்கங்கள் முன்னெச்சரிக்கையாகவும் உணர்வுபூர்வமாகவும் உறுதிப்படுத்தல் வேண்டும். எனவே, குறைந்தபட்சம், குற்றவாளிகளை சட்டத்தின் முன் கொண்டு வருவதற்கும், பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (SGBV) ஏற்படுவதைத் தடுப்பதற்கும் சட்டப்பூர்வ வழிமுறைகளை அமைப்பதன் மூலம் சட்டத்தின் சமமான பாதுகாப்பை அரசாங்கங்கள் உறுதி செய்ய வேண்டும்.

இலங்கையின் அரசியலமைப்பு அதன் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் சித்திரவதை, மனிதாபிமானமற்ற, இழிவான நடத்தை அல்லது தண்டனை ஆகியவற்றிலிருந்து விடுபடுவதற்கான ஒரு நபரின் உரிமையையும் சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கான உரிமையையும் அங்கீகரிக்கிறது. அரசு பயனுள்ள சட்டங்களை இயற்றத் தவறினால் அல்லது பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் (SGBV) செயல்களில் ஈடுபடும் நபர்களை விசாரித்து வழக்குத் தொடரத் தவறிவிட்டதோடு பாதிக்கப்பட்டவர் அவருடைய பாதுகாப்பு அல்லது உறவினர்கள் அல்லது நண்பர்களின் பாதுகாப்புக்கு பயப்படுதல், உளவியல் அதிர்ச்சியை ஏற்படுத்துதல், நெருக்கமான புகைப்படங்களை விநியோகித்தல் ஒப்புதல் இல்லாமல், டிஜிட்டல் தளங்கள் மூலம வற்புறுத்தலோ

20 ஐரோப்பா கவுன்சில், பெண்கள் மற்றும் குடும்ப வன்முறைக்கு எதிரான வன்முறையைத் தடுப்பது மற்றும் எதிர்த்துப் போராடுவது தொடர்பான ஐரோப்பிய கவுன்சில் விளக்க அறிக்கை (கவுன்சில் ஆ/ப் ஐரோப்பா ஒப்பந்தத் தொடர் எண்: 210) UNGA ‘பாலியல் நோக்குநிலை மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் தனிநபர்களுக்கு எதிரான பாகுபாடு மற்றும் வன்முறை: ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகத்தின் அறிக்கை’ UN Doc A/HRC/29/23 (04 Nk 2015).

அல்லது பலவந்தப்படுத்தலோ மூலம் பாலியல் சலுகைகளைப் பெறுதல், சட்டத்தின் சமமான பாதுகாப்பையும், சித்திரவதை, இழிவுபடுத்தும் அல்லது மனிதாபிமானமற்ற நடத்தை அல்லது தண்டனையிலிருந்து விடுபடுவதற்கான உரிமையையும் அரசு உறுதிப்படுத்தத் தவறிவிட்டது.

# 3 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV)

## 3.1 இணக்கம் பெறப்படாத நெருக்கமான புகைப்படம் பகிரல் (NCII) என்பது புகைப்படம் அடிப்படையிலான பாலியல் துஷ்பிரயோகத்திற்கு வழிகோலுகின்றது (IBSA) ("பழிவாங்கல் ஆபாசப்படங்கள்" என பொதுவாக அழைக்கப்படும்).

சமூக ஊடகங்களின் வருகை, நாம் தொடர்பு கொள்ளும் மற்றும் உறவுகளை கட்டியெழுப்பும் வழிகளை நினைவுகூரத்தக்க வகையில் மாற்றியுள்ளது - மேலும் இது காதல் மற்றும் பாலியல் உறவுகளுக்கு நீண்டுள்ளது. இருப்பினும், இணையப் பாதுகாப்பு மற்றும் இணக்கம் வழங்கல் பற்றிய விழிப்புணர்வு இன்மையால், இணையத் தளங்கள் இணக்கமற்ற நெருக்கமான படங்கள் (NCII) மற்றும் காணொளிகளை உருவாக்குவதற்கும், பகிர்வதற்கும், பரப்புவதற்கும் முக்கிய இடங்களாக மாறிவிட்டன. இலங்கையில் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) மிகவும் கொடூரமான வடிவமாக இணக்கமற்ற நெருக்கமான படங்களைப் (NCII) பகிர்வது என்பதை ஆர்வலர்களும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளும் ஏற்றுக் கொள்கிறார்கள். "பழிவாங்கும் ஆபாசப் படங்கள்" என்ற சொல், பாதிக்கப்பட்டவர்களைக் குற்றம் சாட்டுவதன் உட்குறிப்பு மற்றும் பழிவாங்கும் நோக்கத்தை வன்முறையான முன்நிபந்தனைக்கு உட்படுத்துகிறது என்ற அனுமானத்தின் காரணமாக விரைவாக படிப்படியாக நீக்கப்பட்டு வருகிறது. மேலும், இணக்கமற்ற நெருக்கமான படங்கள் (NCII) பகிர்வின் ஒரே நோக்கம் பழிவாங்கும் ஆபாசமல்ல. இணக்கமற்ற நெருக்கமான படங்கள் (NCII) பகிர்வு, புகைப்படம்சார் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு (IBSA) இட்டுச் செல்கிறது, இந்த படங்களை இணையத்தில் பகிரும் அளவிற்கு நெருக்கமான அல்லது சமரசம் செய்யும் படங்களைப் பகிரும் அச்சுறுத்தலும் அடங்கும். இணக்கமற்ற நெருக்கமான படங்கள் (NCII) பகிர்வுக்கான (அல்லது ஐடீஐஎயு) நோக்கங்களில் பாதிக்கப்பட்டவரிடமிருந்து பாலியல் உதவிகள் மற்றும் பண ஆதாயம், பார்வைக் காமம், பாலியல் திருப்தி மற்றும் கட்டுப்பாடு என்பவற்றிற்காக அச்சுறுத்தல் அல்லது மிரட்டி பணம் பறித்தல் போன்றன அடங்கும். புகைப்படம்சார் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு (IBSA) வழிவகுக்கும் இணக்கமற்ற நெருக்கமான படங்கள் (NCII) பகிர்வின் மற்ற வடிவங்கள்

“அப்-ஸ்கிர்டிங்” (பொதுவாக யாரோ ஒருவர் மற்றொரு நபரின் ஆடையின் கீழ் அவர்களின் பிறப்புறுப்பு பார்க்கும் நோக்கத்துடன் அவர்களுக்குத் தெரியாமல் புகைப்படம் எடுப்பதை உள்ளடக்குகிறது.), இது ஒரு பெண்ணின் பாவாடையின் மேல் ஒரு படத்தை எடுப்பது, அல்லது “டவுன்-ப்ளோசிங்” அனுமதியின்றி ஒரு பெண்ணின் மேலாடையை புகைப்படம் எடுத்து, இந்தப் படங்களை பரப்புவது அல்லது வெளியிடுவது. இணையத் தளங்களில், மறைவான புகைப்படக் கருவிகள் மற்றும் “சைபர் பிளாஷிங்” (Cyber-flashing) (இணையத்தில் அந்நியர்களுக்கு ஆபாசமான படங்களை அனுப்புதல்,) மூலம் பொது அல்லது தனிப்பட்ட இடங்களில் இரகசியப் படம்பிடித்தல் அல்லது புகைப்படங்களை எடுப்பது, இணையத் தளங்கள் வழியாக படங்களை அனுப்புவதன் மூலம் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. இலங்கையில், கணிசமான அளவு இணைய இணக்கமற்ற நெருக்கமான படங்கள் (NCII) பகிர்வு என்பது காதல் அல்லது பாலியல் உறவின் விளைவாகும், மேலும் இது பெண்கள் மற்றும் சிறுமிகளை மட்டுமே குறிவைக்கிறது. திரையின் மறுபக்கத்தில் உள்ள நபர்கள் இணக்கமற்ற நெருக்கமான படங்களைப் (NCII) பகிர்ந்து கொள்வதற்காக மட்டுமே இணையத்தில் உறவுகளை கட்டியெழுப்பும் சம்பவங்கள் இலங்கையில் பதிவாகியுள்ளன. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்டவர்களின் பாலியல் சுரண்டல்தான் முக்கிய குறிக்கோள். பரவலாக, பாதிக்கப்பட்டவர்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தல் மற்றும் உளவியல் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பாலுணர்வை ஆயுதமாக்கப்படுவதனை நாம் இங்கு கவனிக்கிறோம்.

## 3.2 உருமாற்றம் செய்தல் - மாற்றியமைக்கப்பட்ட புகைப்படங்கள் / காணொளிகள்

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) மற்றொரு பொதுவான வடிவம் ‘உருமாற்றம் செய்தல் (morphing)’ ஆகும். இதில் பாதிக்கப்பட்டவரின் முகத்தின் படம் மற்றவர்களின் உடல்களில் மிகைப்படுத்தப்படுகிறது. பொதுவாக, இது பாதிக்கப்பட்டவரின் முகத்தை நிர்வாண உடற்பகுதியில் டிஜிட்டல் ரீதியாக உருமாற்றம் செய்து, ஆபாசமான படங்களை உருவாக்கி, பாதிக்கப்பட்டவரை அவமானப்படுத்துவதும், இழிவுபடுத்துவதும் அடங்கும். உருமாற்றம் செய்தல் வடிவில உள்ள தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையானது (TFSGBV) உருவப்படங்கள் மற்றும் காணொளிகளின் உருவாக்கம், பெருக்கம் அல்லது அதிகரித்தலின் அச்சுறுத்தல்களையும் உள்ளடக்கியது. முகத்தை உருமாற்றும் மென்பொருள் செயலிகளின் வளர்ச்சி, உருமாற்றம் மூலம் ஏற்படும் நற்பெயர் மற்றும் உளவியல் அதிர்ச்சியை தீவிரப்படுத்தியுள்ளது. காணொளிகளில் முகங்களை மாற்றுவதற்கு இயந்திர கற்றல் நெறிமுறையைப் (கணிப்பொறி நிரலாக்கலில் ஒரு சிக்கலைத் தீர்ப்பதற்குரிய ஆணைக் குறிப்புப் பட்டியல்) பயன்படுத்தும் ‘காணொளியில் முகம் அல்லது வேறு பகுதியை போலியாக மாற்றல் (deep fake)’ காணொளி உருவாக்கம் போன்ற மென் பொருள் பயன்பாடுகள், காலப்போக்கில் உருமாற்றம் செய்வதை எளிதாக்கியுள்ளன, இதுபோன்ற கையாளப்பட்ட காணொளிகள் வணிக ஆபாச தளங்களில் கூட வெளியிடப்படுகின்றன. விவாதிக்கப்பட்டபடி, உருமாற்றம் செய்யப்பட்ட படங்கள் மற்றும் காணொளிகள் நிதி நோக்கங்களுடன் அல்லது அதனை இரண்டாம் அம்சமாகக் கொண்டு பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்களின் நற்பெயருக்கு தீங்கு விளைவிக்கப் பயன்படுத்தப் படுகின்றன.

---

21 பெண்களுக்கு எதிரான அனைத்துப் பாகுபாடுகளையும் நீக்குவதற்கான ஐக்கிய நாடுகள் குழு (ஊநுனுயுறு)இ ஊநுனுயுறு பொது பரிந்துரை எண். 19: பெண்களுக்கு எதிரான வன்முறை, 1992 <https://www.refworld.org/docid/52d920c54.html , அணுகப்பட்டது 27 ஜனவரி 2023.

22 ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையாளரின் அலுவலகம், சுதந்திரமாகவும் சமமாகவும் பிறந்தது: சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் பால்நிலை நோக்குநிலை, பால்நிலை அடையாளம் மற்றும் பால்நிலைப் பண்புகள் (2வது பதிப்பு, ஐக்கிய நாடுகள் சபை 2019)

## 3.3 பொதுவாக தீங்கிழைக்கும் நோக்கத்துடன் இணையத்தில் (ஒரு குறிப்பிட்ட நபர்) பற்றிய தனிப்பட்ட அல்லது அடையாளம் காணும் தகவலைத் தேடி வெளியிடல் (Doxxing)

னுழஒஒளைபெ அல்லது னழஒளைபெ என்பது இணையத்தில் ‘அனுமதியற்ற தனிநபர் தகவல் வெளியீடு’ என்பதாகும். இது ஒரு நபரை அடையாளம் காணும் தனிப்பட்ட தொலைபேசி எண், பணியிட தொலைபேசி எண், பணியிடம், வீட்டு முகவரி, புகைப்படம், குடும்பத் தகவல் மற்றும் நிதித் தகவல் போன்ற உண்மையான தனிப்பட்ட மற்றும் இரகசியத் தகவல் மற்றும்/அல்லது உரிமையாளரின் அனுமதியின்றி பாதிக்கப்பட்டவரின் தகவலை இணையத்தில் வெளியிடுவதாகும். பாதிக்கப்பட்டவரை அச்சுறுத்தல், கொடுமைப்படுத்தல், அல்லது தீங்கு விளைவித்தல் அல்லது அத்தகைய நோக்கத்துடன் இது பொதுவாக முன்னெடுக்கப்படும். பொதுவாக தீங்கிழைக்கும் நோக்கத்துடன் இணையத்தில் (ஒரு குறிப்பிட்ட நபர்) பற்றிய தனிப்பட்ட அல்லது அடையாளம் காணும் தகவலைத் தேடி வெளியிடலிற்கான (Doxxing) நோக்கம் என்பது பழிவாங்கல், இணையச் செயற்பாட்டின் விளைவு, உடல்கேலி, அல்லது யாருடைய கருத்துக்கள்/நம்பிக்கைகள் சகிக்க முடியாததாகக் கருதப்படுகிறதோ அவரைத் தாக்குதல் என்பனவாகும். இலங்கை இணைய வெளியில் இதன் ஒரு பொதுவான வடிவம், பெண்கள் மற்றும் சிறுமிகளின் தொடர்புத் தகவலை (மற்றும் சில நேரங்களில் பணியிடங்கள்) அவர்களின் புகைப்படத்துடன் பகிர்ந்துகொள்ளல், பொதுவாக ஒரு பெண்ணை சமரசம் செய்யும், அவமானகரமான அல்லது இழிவான சூழ்நிலையில் முன்னிறுத்துதல் மற்றும் தொடர்பு கொள்வதற்கான விபரங்களுடன் பாதிக்கப்பட்டவரின் தகவல்களை பொதுமக்கள் வெளிப்படுத்தல் என்பன அடங்கும். இந்தத் துன்புறுத்தல் அவரை இழிவுபடுத்துவதோடு, அவருக்கு மன அதிர்ச்சியை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் உள்ளாவதற்கும் வழிவகுக்கிறது. இருப்பினும், பொதுவாக தீங்கிழைக்கும் நோக்கத்துடன் இணையத்தில் (ஒரு குறிப்பிட்ட நபர்) பற்றிய தனிப்பட்ட அல்லது அடையாளம் காணும் தகவலைத் தேடி வெளியிடலினால் (Doxxing) பாதிக்கப்பட்டவர்கள் பிரத்தியேகமாக பெண்கள் மற்றும் சிறுமிகள் என்று இது அர்த்தப்படுத்துவதில்லை. பால்நிலை அல்லது பாலியல் நோக்குநிலையைப் பொருட்படுத்தாமல், பொதுவாக தீங்கிழைக்கும் நோக்கத்துடன் இணையத்தில் (ஒரு குறிப்பிட்ட நபர்) பற்றிய தனிப்பட்ட அல்லது அடையாளம் காணும் தகவலைத் தேடி வெளியிடல் (னுழஒஒளைபெ) யாருக்கும் ஏற்படலாம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். பொதுவாக தீங்கிழைக்கும் நோக்கத் துடன் இணையத்தில் (ஒரு குறிப்பிட்ட நபர்) பற்றிய தனிப்பட்ட அல்லது அடையாளம் காணும் தகவலைத் தேடி வெளியிடல் (னுழஒஒளைபெ) என்பது பணியிடம், வீடு மற்றும் பிற தனிப்பட்ட தகவல்கள் போன்ற தனிப்பட்ட விவரங்களை வெளிப்படுத்துகிறது, இது பாதிக்கப்பட்டவரைக் கண்காணிக்கப் பயன்படுகிறது, இது பாதிக்கப்பட்டவருக்கு உடல்ரீதியான துன்புறுத்தலையும், தீங்கினையும் விளைவிக்கும். ‘வெளியேறுதல்’ என்பதும் பெண் சமபாலுறவினர், ஆண் சமபாலுறவினர், இருபாலுறவினர், மாற்றுப்பாலினத்தார், பால்புதுமையர் மற்றும் இடைப்பாலினர் (LGBTQI+) சமூகத்தை இலக்காகக் கொண்ட பொதுவாக தீங்கிழைக்கும் நோக்கத்துடன் இணையத்தில் (ஒரு குறிப்பிட்ட நபர்) பற்றிய தனிப்பட்ட அல்லது அடையாளம் காணும் தகவலைத் தேடி வெளியிடலின் (Doxxing) ஒரு வடிவமாகும். இது ஒருவரின் பாலியல் நோக்குநிலை மற்றும் பால்நிலை அடையாளத்தை வெளியிடுவதை உள்ளடக்குகிறது. சில சந்தர்ப்பங்களில் தனிப்பட்ட தகவலுடன். இலங்கைக்குள் இந்த சமூகத்தின் மீது நிலவும் எதிர்மறை மனப்பான்மையால் அவர்களுக்கு எதிரான மாற்றுப்பாலினர்

23 ‘பால்நிலை அடிப்படையில் தனிநபர்களுக்கு இடையேயான இணையதள மூலமான குற்றம்’ (ருழேனுஊஇ பிப்ரவரி 2020) <https://www.unodc.org/e4j/en/cybercrime/module-12/key-issues/gender-based-interpersonal-cybercrime.html> அணுகப்பட்டது 05 மார்ச் 2023.

வெறுப்பு மற்றும் சமபாலுறவு வெறுப்புத் தாக்குதல்களுக்கு வழிவகுத்துள்ளதால் இது மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

## 3.4 அச்சுறுத்தி பாலியல் நடவடிக்கையை அல்லது பணத்தை கேட்டல் (Sextortion)

அச்சுறுத்தி பாலியல் நடவடிக்கையை அல்லது பணத்தைக் கேட்டல் (Sextortion) என்பது ஒரு வகையான நிகழ்நிலை மிரட்டல் செயற்பாடு ஆகும். குற்றமிழைப்பவர்களின் கோரிக்கைளை பாதிக்கப்பட்டவர் நிறைவேற்றவில்லையெனின், பாதிக்கப்பட்டவரின் வெளிப்படையான தனிப்பட்ட படங்கள், காணொளிகள் மற்றும்/அல்லது உரையாடல்கள் உட்பட ஆனால் அது மட்டுப்படுத்தப்படாமல், தனிப்பட்ட மற்றும் சில சந்தரப்பங்களில் சமரசம் செய்துகொள்ளும் தகவல்களை வெளியிடுவேன் என்று பாதிக்கப்பட்டவரை அச்சுறுத்துவது இதில் அடங்கும். பாலியல் சலுகைகள், நிர்வாண புகைப்படங்கள், காணொளிகள் மற்றும் பணம். பாலியல் பலாத்காரம் செய்யும் ஒரு குற்றவாளி, பாதிக்கப்பட்டவர்களுக்குத் தெரிந்த குடும்பத்தினர், நண்பர்கள், முதலாளிகள் அல்லது பிற நபர்களுடன் வெளிப்படையான அல்லது அந்தரங்கமான உள்ளடக்கத்தை வெளியிடுவதாக அச்சுறுத்துதலாகும். எனவே, தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் (TFSGBV) ஏற்படும் களங்கம் மற்றும் பாதிக்கப்பட்டவர் மதிக்கும் நெருங்கிய குடும்ப, சமூக மற்றும் வகுப்புவாத உறவுகளை இழக்க நேரிடும் என்ற அச்சத்தை ஆயுதமாக்குவதன் மூலம் பாதிக்கப்பட்டவரை தனிமைப்படுத்தி கையாளுவதே இதன் நோக்கமாகும்.

## 3.5 போலிவிபரங்கள் மற்றும் ஆள்மாறாட்டம் (Fake Profiles and Impersonation)

இணையத்தில அநாமதேய, தன்மை என்பது இரு முனைகளைக் கொண்ட வாளைப் போன்றதாகும். பொது இருப்பு அல்லது டிஜிட்டல் தடத்தை இணையத்தில் வைத்திருக்க விரும்பாதவர்களுக்கு இது ஒரு பாதுகாப்பான புகலிடமாக இருக்கலாம். துரதிர்ஷ்டவசமாக, தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் (TFSGBV) சூழலில், போலி சுயவிவர உருவாக்கம் மற்றும் ஆள்மாறாட்டம் உருவாக்குதல் ஆகியவை இலங்கை இணையவெளியில் தீவிரமாக சிக்கலான நடத்தை முறையை முன்வைத்துள்ளன. பாதிக்கப்பட்டவரின் புகைப்படங்கள் மற்றும்/அல்லது தனிப்பட்ட விவரங்களைப் பயன்படுத்தி சமூக ஊடகத்தில் போலி சுயவிவரங்களை உருவாக்குவதும் இணையத்தில் ஆள்மாறாட்டம் செய்வதும் இதன் பொதுவான வடிவங்களில் அடங்கும். பாதிக்கப்பட்டவரின் தனிப்பட்ட தகவல்களை குற்றவாளி பயன்படுத்துவார். இது பாதிக்கப்பட்டவரின் சமூக ஊடக கணக்குகளைத் தேடுவதன் மூலம் பெறப்படுகிறது அல்லது பாதிக்கப்பட்டவரின் போலி சமூக ஊடக சுயவிவரத்தை உருவாக்குவதற்கு பாதிக்கப்பட்டவரின் நெருங்கிய உறவின் மூலம் குற்றவாளி ஏற்கனவே அந்தரங்கமாக இருக்கிறார். பாதிக்கப்பட்டவரின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு நட்பு கோரிக்கைகளை அனுப்புவதனையும் குற்றவாளி தொடருவார். போலி சுயவிவரத்தில் அவற்றைச் சேர்த்த பிறகு, பாதிக்கப்பட்டவரின் தனியார் படங்கள், போலி சுயவிவரத்தில் பாதிக்கப்பட்டவரின் நெருக்கமான படங்கள் மற்றும் காணொளிகளால் குற்றவாளியால் உருவாக்கப்பட்ட அவதூறான உள்ளடக்கத்தைப் பகிர்ந்து கொள்வார். இதனால் அவமானம், சங்கடம், அவதூறினை எதிர்கொள்வதுடன், சில சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர் தமது குடும்ப உறவுகளையும், நண்பர்களையும் இழப்பதற்கும் வழிவகுக்கும். அத்துடன், போலி சுயவிவரத்தில் சேர்க்கப்பட்ட நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரிடமிருந்து பணம் கோருவதன் மூலம் நிதி இலாபத்தை நாடுவதற்கு குற்றவாளி முயற்சிப்பார். இந்த போலி சுயவிவரங்கள் இணக்கமற்ற நெருக்கமான படங்களைப் (NCII) பகிர்ந்து கொள்வதற்கும், பொதுவாக தீங்கிழைக்கும்

நோக்கத்துடன் இணையத்தில் (ஒரு குறிப்பிட்ட நபர்) பற்றிய தனிப்பட்ட அல்லது அடையாளம் காணும் தகவலைத் தேடி வெளியிடல் (ஞுழஒஒைபெ) மற்றும் உருமாற்றம் செய்தல் போன்ற பிற பாலியல் சுரண்டல்களில் ஈடுபடுவதற்கும் பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுள்ளதுடன், இணையத்திலும், இணையத்திற்கு வெளியிலும் பொறுப்புக்கூறலை திறம்பட தவிர்க்கிறது. போலி சுயவிவரத்தின் மற்றொரு பரிமாணம், ஒரு குற்றவாளி, அநாமதேய நோக்கங்களுக்காக, ஒரு நபரின் சமூக ஊடக பக்கங்களிலிருந்து படங்களைப் பயன்படுத்தி ஒரு போலி சுயவிவரத்தை உருவாக்கும்போது, சில சந்தர்ப்பங்களில் படங்கள் சொந்தமான நபரின் பெயரில் இல்லை. இந்த வகையான போலி சுயவிவரங்கள் பெரும்பாலும் குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பெண்களை பாலியல் செயல்பாடுகளில் ஈர்க்கவும், கவர்ந்திழுக்கவும் உருவாக்கப்படுகின்றன. இது இணையத்திலும், இணையத்திற்கு வெளியிலும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு வழிவகுக்கிறது. அத்துடன், போலி சுயவிவரங்கள் வற்புறுத்தல் அல்லது கட்டாயப்படுத்தலைப் பயன்படுத்துவதன் மூலம், அனாமேதயமாக பாதுகாப்புடன் பணத்தை கோருவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

# 4 கற்றல் தொகுதியின் குறிக்கோள்

இந்த கற்றல்தொகுதி மேற்கூறிய சூழலுக்குள் அமைந்துள்ளது மற்றும தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (TFSGBV) புகாரளிக்கவும் பதிலளிக்கவும் அமைக்கப்பட்ட தற்போதைய வழிமுறைகளின் 4 மாத மதிப்பீட்டிலிருந்து பெறப்படுகிறது. முக்கிய அரச சட்ட அமுலாக்கல் முகவர்கள் மற்றும் பரீட்சார்த்த திட்டத்தில் முக்கியமான புள்ளிகள் கொண்ட அரசு சாரா நிறுவனங்களின் செயல்பாடுகளை முன்னிலைப்படுத்துவதற்கு இது விரும்புகிறது, மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை அணுகும் செயல்பாட்டில் உள்ள இடைவெளிகளை அடையாளம் காணவும் விளைகின்றது.

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் பால்நிலை அடிப்படையிலானவர்களாக இருப்பதால், இந்த நிறுவனங்கள் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (TFSGBV) பால்நிலை அணுகுமுறையைக் கொண்டிருந்தனவா - குறியிடப்பட்ட அல்லது யதார்த்த நடைமுறையின் மூலம் கட்டமைக்கப்பட்டுள்ளனவா என்பதே மதிப்பீட்டின் பிரதான கேள்வியாக இருந்தது. எந்த நிறுவனங்கள் பால்நிலை அணுகுமுறையாக புரிந்து கொண்டன, அத்தகைய அணுகுமுறை வடிவமைக்கப்பட்டபோது என்ன காரணிகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டன, இதை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான தடைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

முக்கிய பங்குதாரர்களின் இணையம்சார் கல்வியறிவை மதிப்பாய்வு செய்வதே இந்த தொகுதியின் மற்ற முக்கிய கவனமாக இருந்தது. முறைகேடுகள் நடைபெறுவதற்கான அடித்தளமாக தொழில்நுட்பம் இருப்பதால், முக்கிய பங்குதாரர்களின் தொழில்நுட்பம் திறன்களை மேம்படுத்துவது நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) மற்றும் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையைத் (TFSGBV) தடுப்பதிலும் சரிசெய்வதிலும் அதன் மூலம் பதிலளிப்பினை மேம்படுத்துவதிலும் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும். வெறுக்கத்தக்க பேச்சு மூலம் பெண்கள் அல்லது பல்வேறு பாலியல் தோற்றம், பால்நிலை அடையாளம், பால்நிலை வெளிப்பாடு மற்றும் பால் குணவியல்புகளைக் (SOGIEC) கொண்ட நபர்களைக் குறிவைப்பதால், பெண்கள், சிறுமியர் மற்றும் பல்வேறு பாலியல் தோற்றம், பால்நிலை அடையாளம், பால்நிலை வெளிப்பாடு மற்றும் பால் குணவியல்புகளைக் (SOGIEC) கொண்ட நபர்களுக்கு பாதுகாப்பற்றதாகவும் ஆபத்தானதாகவும் இணையச் சூழல் மாறிவிட்டது. மோசமான, தாக்குதல் மற்றும் கோபமான வெறுக்கத்தக்க பேச்சு, குறிப்பிட்ட இனக்குழுக்கள் மற்றும் மதங்கள் குறிவைக்கப்படும் பெண்கள் மற்றும் சிறுமிகளை நோக்கி இயக்கப்படுகிறது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த கற்றல்தொகுதியின் தயாரிப்பில், தொழில்நுட்பம் ஆதரவு, சட்ட உதவி, உளச்சமூக உதவி மற்றும் ஆய்வு மற்றும் பயிற்சி மாத்திரமன்றி, திறன்கள் உள்ளடங்கலாக இலங்கையில் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (TFSGBV) பதிலளிக்கும் முக்கிய பங்குதாரர்களை அடையாளம் காண்பதற்கான ஆய்வு நடத்தப்பட்டது. இந்த பூர்வாங்க வரைபடமாக்கல் பயிற்சியைத் தொடர்ந்து, இந்த பங்குதாரர்கள் சம்பந்தப்பட்ட

இரண்டு இலக்கு குழுக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இந்த ஆலோசனைகள் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (TFSGBV) பதிலளிப்பதன் கள யதார்த்தங்களையும், தற்போதுள்ள வழிமுறைகளில் வெளிப்படையான இடைவெளிகளையும் அடையாளம் காண்பதில் பிரதான கருவியாக இருந்தன.

## 4.1 பிரதான அவதானிப்புகள்

கணினி குற்றவியல் புலனாய்வுப் பிரிவு (CCID) என்பது அனைத்து வடிவங்களிலுமான தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) உள்ளடங்கலாக தொழில்நுட்பம் தொடர்பான மற்றும் சமூக ஊடகம் தொடர்பான குற்றங்களைக் கையாளும் முதன்மை சட்ட அமுலாக்க உறுப்பாகும்.

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) வழக்குகளுக்கு பதிலளிக்கும் சட்ட அமுலாக்க நிறுவனத்திற்குள் ஒரு முக்கிய உறுப்பாக இலங்கை பொலிஸுடன் இணைக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்கள் பணியகம் உள்ளது. இது பெரும்பாலும் கணினி குற்றவியல் புலனாய்வுப் பிரிவுடன் (CCID) இணைந்து பணியாற்றுகின்றது. இணையத்தில் இடம்பெறும் சிறுவர் பாலியல் சுரண்டலுக்கும் பணியகம் பதிலளிக்கிறது. பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (ளுபுடீஏ) வழக்குகளை பதிவு செய்து விசாரிக்கும் வகையில் நாட்டில் உள்ள 44 பொலிஸ் நிலையங்களில் பிரத்தியேக பிரிவும் காணப்படுகிறது.

கணினி குற்றவியல் புலனாய்வுப் பிரிவு (CCID) மற்றும் பணியகத்தைத் தவிர, பல்வேறு சிவில் நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களாலான பதிலளிப்பு பொறியமைப்பு ஒன்றும் உள்ளது. ஆய்வு, சட்ட உதவி, ஆதரவு சேவைகள், தொழிநுட்ப உதவி மற்றும் சட்ட அமுலாக்கத்துடன் நேரடியாக பணியாற்றுவது உள்ளிட்ட பகுதிகளில் இந்த பிரிவு பணிபுரிகின்றது.

## 4.2 இரண்டாம் நிலை தரவு ஆய்வு

இலங்கையில தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) பதிலளிப்பு பொறியமைப்பை உருவாக்கும் அமைப்புகள் மற்றும் நிறுவனங்களை வரைபடமாக்க 2021ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை பூர்வாங்கமான அடிப்படை இரண்டாம் நிலை தரவு ஆய்வு நடத்தப்பட்டது.

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (TFSGBV) பல்வேறு வகையான பதிலளிப்புகளில் ஈடுபட்ட 18 முக்கிய அமைப்புக்களை வரைபடமாக்கல் பயிற்சி அடையாளம் கண்டுள்ளது. தரவு சேகரிப்பு என்பது நிறுவனங்களின் பிரதிநிதிகளிடமிருந்து முதன்மை உள்ளீட்டின் கலவையாக அமைவதுடன், பொதுவில் கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் இரண்டாம் நிலை ஆய்வாகும்.

ஒவ்வொரு அமைப்புகளையும் பற்றிய பின்வரும் தகவல்கள் அளவிடப்பட்டன:

- ஒவ்வொரு அமைப்பும் பதிலளித்த தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) வடிவங்கள்
- மறுமொழி வழிமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன

- தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) வழக்குக்கு பதிலளிக்கும் செயல்முறை
- கணினி கல்வியறிவு, பால்நிலை உணர்திறன் உள்ளிட்ட பதிலளிப்பவர்கள்/
- உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி அல்லது நிபுணத்துவம்
- தரவு தனியுரிமை, காப்பகம் மற்றும் பதிவுசெய்தல் பற்றிய அறிவு
- தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (TFSGBV) பதிலளிப்பதற்கான தடைகள் மற்றும்/அல்லது நீதி மற்றும் நிவாரண முறைகளைப் பின்பற்றுதல்
- மொழி திறன் மற்றும் அணுகும் திறன்

இணக்கமற்ற நெருக்கமான புகைப்படப் பகிர்வு (NCII) /காணொளி பகிர்வு, இணையப் பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் இணையத் துன்புறுத்தல் (நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) உட்பட) என்பன தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) வடிவங்களாக அடையாளம் காணப்பட்டு பதிலளிக்கப்படுகின்றன. முக்கிய பங்குதாரர்களால் கூறப்பட்ட சம்பவங்களாக 4 அமைப்புகளால் அச்சுறுத்தல்கள் அடையாளம் காணப்பட்டன.

பதில் பொறிமுறைகளைப் பொறுத்தவரை, சட்ட உதவி என்பது பொதுவாக வழங்கப்படும் பதில் பொறிமுறையாகும். ஒன்பது நிறுவனங்கள், புகாரைப் பதிவு செய்தல் மற்றும் பின்தொடர்தல் உள்ளிட்ட சட்டச் செயல்முறைகள் தொடர்பாக கூடுதல் உதவிகளை வழங்கியதை உறுதிப்படுத்தின.

பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழில்நுட்ப ஆதரவு இருப்பதை ஒன்பது நிறுவனங்கள் உறுதி செய்துள்ளன. சமூக ஊடக பயன்பாடுகளில் தனியுரிமை கட்டமைப்புகளை சரிசெய்தல், ஆள்மாறாட்டம் செய்யும் அல்லது அவதூறு செய்ய முயற்சிக்கும் போலி விவரங்களைத் தடுத்தல் மற்றும் அகற்றல் மற்றும் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தை அகற்ற சமூக ஊடக நிறுவனங்களுக்கு புகார்களை வழங்குதல் என்பன இதில் அடங்கும். குறிப்பிட்டுக் கூறுவதாயின், இந்த மூன்று சேவைகளையும் 4 நிறுவனங்கள் மட்டுமே வழங்கின.

14 நிறுவனங்கள் அனைத்து சேவைகளுக்கும் மும்மொழி அணுகலைக் கொண்டுள்ளன. 18 நிறுவனங்களில் ஒன்பது நிறுவனங்கள் பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் உத்தியோகத்தர்களுக்கு சில முறையான பயிற்சிகளைக் கொண்டுள்ளன: டிஜிட்டல் கல்வியறிவு, பால்நிலை உணர்திறன் மற்றும் உளவியல் ஆதரவு வழங்கல். எவ்வாறாயினும், 3 நிறுவனங்கள் மட்டுமே பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவியல் ஆதரவை வழங்கும் திறனைக் கொண்டிருந்தன, ஒரே அமைப்பு பாதிக்கப்பட்டவர்களை அத்தகைய சேவைகளை வழங்கும் வெளிப்புற அமைப்புகளுக்கு அனுப்ப முறையான நடைமுறை நிறுவப்பட்டுள்ளதாக தெரிவித்தது.

பல நிறுவனங்கள் டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் பால்நிலை உணர்திறன் செயலமர்வுகள் மற்றும் பயிற்சி திட்டங்களையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. இதில் பெரும்பாலானவை பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு வழங்கப்பட்டன அல்லது கவனக்குறைவாக பெண்கள் மற்றும் சிறுமிகளால் அதிகம் கலந்துகொள்ளப்பட்டன. கணக்கெடுக்கப்பட்ட அமைப்புகளில் 1 மட்டுமே போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் கணவரை இழந்தப் பெண்களுடன் உணர்வுபூர்வமாக வேலை செய்தது. 4.3 இலக்குக் குழு கலந்துரையாடல்கள் (குபுனுள)

## 4.3 இலக்குக் குழு கலந்துரையாடல்கள் (FGDs)

இரண்டாம் நிலை தரவு ஆய்வை தொடர்ந்து, தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிற்கு (TFSGBV) பதிலளிக்கும் தற்போதைய பணியின் நோக்கத்தைப் பற்றிய ஆழமான நுண்ணறிவைப் பெறுவதற்கான நோக்கத்துடன் இரண்டு இலக்குக் குழு கலந்துரையாடல்கள் (FGD) நடத்தப்பட்டன. மேலும் அவர்களின் பதில் கருவிக்குள் பால்நிலை அணுகுமுறை பின்பற்றப்படுகிறதா என்பதைக் கண்டறியவும் இந்தத் தொகுதியின் தொடர்புடைய கூறுகளைத் தெரிவிக்க நிறுவனங்களின் டிஜிட்டல் கல்வியறிவின் அடிப்படை அளவை நிறுவுவதில் குபுனுகளும் கருவியாக இருந்தன.

### 4.3.1 இலக்குக் குழு கலந்துரையாடல்கள் (FGD) 1 - அரச நிறுவனங்கள

முதல் இலக்குக் குழுவானது இலங்கை கணினி அவசரநிலை தயார்நிலை குழு (SLCERT) மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (NCPA) உட்பட சட்ட அமுலாக்க முகவர் மற்றும் சிவில் நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கொண்டிருந்தது. தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) சம்பவங்கள் தொடர்பாக இணைய பாதுகாப்பு, பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரங்கள் மற்றும் கணினி குற்றங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் முக்கிய அரசு நிறுவனங்களின் அணுகுமுறை பற்றிய தகவல்களை சேகரிப்பதே இந்த கலந்துரையாடலின் முதன்மை நோக்கமாகும்.

இலங்கையில் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) தற்போதைய நிலைமை, சட்டத்தை அமுல்படுத்துதல் தொடர்பாக இந்த கலந்துரையாடலின் மூலம் பெறப்பட்ட நுண்ணறிவு பின்வருமாறு:

- தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) மிகவும் அடிக்கடி புகாரளிக்கப்பட்ட வடிவம், இணக்கமற்ற நெருக்கமான புகைப்படப் பகிர்வு (NCII). பெரும்பாலான வழக்குகள், முன்பு காதல் அல்லது பாலியல் உறவில் இருந்த குற்றவாளி மற்றும் முறைப்பாட்டாளரை உள்ளடக்கியது. பழிவாங்கும் நோக்கம் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இருந்தது.
- இந்த முறைப்பாடுகளில் பெரும்பாலானவை, அதிக உணர்திறன் வாய்ந்த உள்ளடக்கம், பாலியல் உதவிகள் மற்றும் பணம் ஆகியவற்றைக் கோரும் குற்றவாளியிடம் மிரட்டல்கள் மற்றும்/அல்லது பாலியல் பலாத்கார முயற்சிகள் ஆகியவை அடங்கும். தளங்களில் இருந்து சமரசம் செய்யும் படங்கள்/காணொளிகள்/உள்ளடக்கத்தை அகற்றுவதுதான் அடிக்கடி கோரப்படும் உதவியாக இருந்தது.
- முன்னாள் துணை சம்பந்தப்பட்ட பாலியல் மோசடி வழக்குகளில் நிதி நோக்கம் அரிதாகவே இருந்தபோதிலும், வணிகரீதியான ஆபாச தளங்கள் மற்றும் சமூக ஊடகப் பக்கங்களில் குற்றவாளிகள் அத்தகைய உள்ளடக்கத்தை விற்பனை செய்வதால், சம்மதம் இல்லாத அந்தரங்கப் பொருட்களின் பணமாக்குதல் வேகமாக அதிகரித்துள்ளது.
- முறைப்பாடு செய்பவர்கள் மற்றும் உடனடி குடும்பங்களிடமிருந்து கடுமையான களங்கம் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை குற்றம் சாட்டுவது இருக்கின்றது. இது சம்மதம் இல்லாத அந்தரங்க ஆவணப் பகிர்வு மற்றும் பாலியல் பலாத்காரம் போன்ற நிகழ்வுகளில் கடுமையானது.

- கவலையளிக்கும் வகையில், முறைப்பாடு செய்பவர்களுடனான வழக்குகளிலும் விரோதம் தெளிவாகத் தெரிகிறது. குற்றவாளி ஒருவர் தன்னை கத்தி முனையில் பிடித்து சமரசம் செய்யும் வகையில் புகைப்படம் எடுத்ததாக 13 வயது சிறுமி புகார் அளித்த வழக்கை பதிலளித்தவர்களில் ஒருவர் பகிர்ந்துள்ளார். இருப்பினும், மேலதிக விசாரணையில், அவள் தானாக முன்வந்து அந்த புகைப்படங்களை குற்றவாளிக்கு அனுப்பியது கண்டுபிடிக்கப்பட்டது. அவர் இப்போது அந்த படங்களைப் பயன்படுத்தி அவரை செக்ஸ்டார்ட் (sextort) செய்தார். பெற்றோரால் கண்டிக்கப்படுவோம் அல்லது புறக்கணிக்கப்படுவோம் என்ற பயத்தில் அந்த 13 வயது சிறுமி முழு உண்மையையும் வெளிப்படுத்தவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் முழுமையாக முன்வராமைக்கு இந்த வழக்கு எவ்வாறு களங்கத்தை ஏற்படுகிறது என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்று பதிலளித்தவர் குறிப்பிட்டார், நெருக்கமான வலையமைப்புக்களில் இருந்து மேலும் அதிர்ச்சிகரமான சிகிச்சையைத் தவிர்க்க அடிக்கடி விவரங்களை மறைத்து, விசாரணை செயல் முறைகளைத் தடுக்கிறது.
- தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் கிடைக்கக்கூடிய பதிலளிப்பு பொறிமுறைகள் பற்றிய நீண்டகால விழிப்புணர்வு இல்லாதது, குறிப்பாக கிராமப்புறங்களிலும் மற்றும் கொழும்பு மாவட்டத்திற்கு வெளியேயும் எப்போதும் உள்ளது. பாதிக்கப்பட்டவர் வயதில் சிறியவராக இருந்தால், பெற்றோர் அல்லது வயது வந்த பாதுகாவலர் தரப்பில் பதிலளிக்கும் வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாதது, தீங்கினை குறைப்பதில் பின்னடைவை ஏற்படுத்துகிறது.
- சட்ட அமுலாக்க நிறுவனங்களுக்கு முறைப்பாடுகள் வரும்போது அது பெரும்பாலும் 'தாமதமாக' இருக்கும். ஒதுக்கிவிடப்படலாம் என்ற பயத்தால் முன்வரத் தயங்குவதும், என்ன செய்வது என்பது பற்றிய விழிப்புணர்வு இல்லாததும்தான் இந்தத் தாமதங்களுக்கு முக்கியக் காரணங்களாகும். சாதனங்களிலிருந்து தரவு மற்றும் ஆதாரங்களை மீட்டெடுப்பதில் தொழில்நுட்ப சிக்கல்கள் இத்தகைய தாமதங்கள் காரணமாக அல்லது முறைப்பாட்டாளர் சாதனம்/ஆதாரங்களை தற்செயலாக சேதப்படுத்துவதால் ஏற்படுகின்றன.
- 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கு இடையே (கொவிட்-19 காரணமாக), தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) பரவலானது பல ஆண்டுகளாக சீராக உயர்ந்து வருகின்றது. 13 - 25 வயதிற்குட்பட்டவர்கள், பெரும்பாலும் சிறுமியர் மற்றும் பெண்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். பெரும்பாலான முறைப்பாடுகள் பாடசாலை செல்பவர்களினால் முன்வைக்கப்படுகின்றன.
- வேலையற்றவர்கள், வீட்டில் இருக்கும் பெண்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளும் இலகுவில் பாதிக்கப்படக்கூடிய குழுக்களாக உள்ளனர். பகலில் பெரும்பாலான நேரத்தை குடும்பத்துடன் செலவழிக்கும் பெண்கள் சமூக ஊடகங்களில் அதிக நேரத்தை செலவிடுவதும், பெரும்பாலும் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் நிதி மோசடிகளால் பாதிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.
- வயது வந்தோரின் போதியளவு மேற்பார்வை இன்மை புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு எதிராக தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) அதிகமாக பரவுவதற்கு ஒரு காரணியாக இருந்தது. இந்த குழந்தைகள் பெரும்பாலும் தாத்தா பாட்டி போன்ற இரண்டாம் நிலை பாதுகாவலர்களின் பராமரிப்பில் விடப்படுவதாக பதிலளித்தவர்கள் குறிப்பிட்டனர், அவர்களின் டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும்/அல்லது தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிற்கான (TFSGBV) பதிலளிப்பு வழிமுறைகள் பற்றிய அறிவு மிகவும் குறைவாக இருக்கும்.

- கொவிட்-19இன் போது பாடசாலைகள் மூடப்பட்டதாலும், சுகாதார நெறிமுறைகளின்படி சமூகமயமாக்கலுக்கு விதிக்கப்பட்ட வரம்புகளாலும், குழந்தைகள் இணையப் பாதுகாப்பு குறித்த சரியான அறிவு இல்லாமல் இணையத்தில் அதிக நேரம் செலவிட்டனர். டிஜிட்டல் பாதுகாப்பு குறித்த போதிய அறிவு இல்லாமல் பாடசாலை தொடர்பான தகவல்தொடர்புக்கு வட்ஸ்அப் குழுக்களைப் பயன்படுத்துதல், மற்ற பெரியவர்கள் குழந்தைகளாகவோ அல்லது பெற்றோர்களாகவோ காட்டிக்கொள்வதில் குறிப்பிடத்தக்க சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. குற்றவாளிகள் தொடர்பு விவரங்கள் மற்றும் சிறார்களின் புகைப்படங்கள் போன்ற திறந்த மூல தகவல்களை சேகரிக்கின்றனர், அவை சிறார்களை துன்புறுத்துவதற்கும், அச்சுறுத் துவதற்கும் மற்றும் பாலியல் பலாத்காரத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

- ஆண்களும் சிறுவர்களும் கூட தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிற்கு (TFSGBV) உட்படுத்தப்படுகிறார்கள், ஆனால் இது இலங்கையில் குறைவாகவே பேசப்படுகிறது. அண்மைய காலங்களில் வெளிப்பட்ட ஒரு குறிப்பிட்ட போக்கு, ஆண்களுடன் காணொளி அழைப்புகள் உட்பட பாலியல் உரையாடல்களைத் தொடங்குவதும், பின்னர் ஆண்களை அச்சுறுத்துவதற்கு வெளிப்படையான பரிமாற்றங்களைப் பயன்படுத்துவதும் அடங்கும்.

- விரிவான பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் சம்மதக் கல்வியின் பற்றாக்குறை, தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிற்கு (TFSGBV) மிகவும் பாதிக்கப்படக்கூடிய சிறார்களுக்கும் பெண்களுக்கும் பங்களிக்கிறது. டிஜிட்டல் சாதனத்திற்கான அணுகலுடன் இளமைப் பருவத்தில் இயற்கையான பாலியல் ஆர்வத்தின் தற்செயல் நிகழ்வு பெரும்பாலும் டிஜிட்டல் கல்வியறிவு, இணைய பாதுகாப்பு மற்றும் சம்மதம் பற்றிய விரிவான அறிவு இன்மையால் நிகழ்கிறது.

- பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் மன மற்றும் உணர்ச்சி நல்வாழ்வைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் பதிலளித்தவர்கள் வலியுறுத்தியுள்ளனர், குறிப்பாக பாதிக்கப்பட்டவர் வயதில் குறைந்தவராக இருந்தால். பால்நிலை-உணர்திறன் பயிற்சியில் உள்ள குறைபாடுகள் மற்றும் உளவியல் சமூக சேவைகள் மீதான மேலோட்டமான நிராகரிப்பு அணுகுமுறைகள் செயல்படுத்துவதை கடினமாக்கியுள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக, பால்நிலை - உணர்திறன் மிகுந்த நீதித்துறை செயல்முறையின் தேவையும் எழுப்பப்பட்டது.

- நாடு முழுவதும் உதவி சேவைப் பிரிவுகள் இருந்தபோதிலும், கொழும்பிற்கு வெளியே அறிக்கையிடுவதற்கான அணுகல் வசதி இன்னும் குறைவாகவே உள்ளது, இது பெரும்பாலும் பெண்கள் மற்றும் சிறுமிகள் இலகுவில் பாதிக்கப் படக் கூடியவர்களாக உள்ளப் பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

- நிறுவன அறிவுத் தளம் மற்றும் திறன்களைப் பொறுத்தவரை, ஒருமித்த கருத்து என்னவென்றால், சமீப காலங்களில் முன்னேற்றம் ஏற்பட்டாலும், இணையக் குற்றங்கள், தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் சட்டச் சூழலைப் பற்றிய விழிப்புணர்வு இன்னும் பொலிஸ் நிலையத்திலும் தலைநகர் கொழும்புக்கு வெளியிலும் செயல்படும் அரசு நிறுவனங்களின் பிற கிளைகளிலும் உள்ளது.

- திறமையான பதில்களை உறுதி செய்வதற்கான கூடுதல் தடைகள், சிறப்புப் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை (தகவல் அமைப்புகள் மற்றும் தடயவியல் தணிக்கை போன்ற பகுதிகளுக்கு) மற்றும் தடயவியல் தரவுகளைப் பற்றி நீதித்துறை உத்தியோகத்தர்கள் மற்றும் நீதிமன்ற அமைப்புகளிடையே உள்ள அறிவு இல்லாமை ஆகியவை அடங்கும். சட்ட அமுலாக்க மற்றும் பிற அரச நிறுவனங்களுக்கு சமீபத்திய தொழில்நுட்பம் மற்றும் சாதனங்கள் இல்லாதது குறிப்பிடத்தக்க தடைகளாகும்.

- பொது அணுகல் அழைப்பு மையங்கள் மற்றும் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான கையாள்வதற்கான நியமிக்கப்பட்ட உதவி சேவைகளில் முறைப்பாடுகளைக் கையாளும் நபர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. நிறுவனங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் தகவல் தொடர்பு இடைவெளி தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) வழக்குகளுக்கு பயனுள்ள, நெறிப்படுத்தப்பட்ட பதில்களை உறுதிசெய்வதற்கு ஒரு தடையாக அங்கீகரிக்கப்பட்டது. மேலும், முறைப்பாடு செய்தல் மற்றும் பதிலளிப்பது போன்ற புதிய முறைகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாதது பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதில் தீங்கு விளைவிக்கும்.

## 4.3.1.1 பால்நிலைப்படுத்தப்பட்ட அணுகுமுறை

இளம் சிறுமிகளும் பெண்களும் பெரும்பாலும் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்குப் (TFSGBV) பலியாவதாக பதிலளித்தவர்கள் தெரிவித்தனர், பாதிக்கப்பட்டவர்கள் மீது குற்றம் சாட்டும் கலாசாரம் மிகவும் பரவலாக உள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். வழக்குகள் தொடர்பான அவர்களின் அணுகுமுறையை இது எவ்வாறு வெளிப்படுத்துகின்றது என்பது தொடர்பில் இலங்கை பொலிஸ் இணையத்தளத்தின் மூலம் அண்மையில் நிறுவப்பட்ட இணைய முறைப்பாடு சேவையை சட்ட அமுலாக்க நிறுவனங்கள் சுட்டிக்காட்டின.

பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு நேரில் சென்று முறைப்பாட்டைப் பதிவு செய்வதன் அவசியத்தை இது குறைக்கும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர் - இந்தச் செயற்பாடு கடினமானது, மிரட்டுவது மற்றும் சில சமயங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தக் கூடியது. நெரிசலைக் குறைக்க, முறைப்பாட்டைக் கையாள்வதற்கான அடுத்தடுத்த உள் செயல்முறை நெறிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சேவை மூன்று மொழிகளிலும் கிடைக்கிறது மற்றும் முறைப்பாடு செய்பவர்கள் உள்ளூர் பொலிஸ் நிலையத்தின் மூலம் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு அனுப்பப்படுவார்கள். சட்டப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்வது ஒரு தெரிவாகும், மேலும் இந்த இணைய வழக்குகள் பொருத்தமான உத்தியோகத்தருக்கு அனுப்பப்படும், அதே நேரத்தில் தேவைப்படும் இடங்களில் பூர்வாங்க தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கு அந்தந்த பொலிஸ் நிலையத்தின் தகவல் தொழில்நுட்ப உதவி பிரிவுக்கு அறிவிக்கப்படும்.

## 4.3.2 இலக்குக் குழு கலந்துரையாடல் (FGD) 2 - சிவில்சமூகம்

இரண்டாவது இலக்குக் குழு கலந்துரையாடலானது (FGD) தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (TFSGBV) குறிப்பாக பதிலளித்த அரசு சாரா சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. பரந்த அளவில், இந்த நிறுவனங்கள் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் (TFSGBV) பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்ட உதவி, பொலிஸ் அறிக்கையிடலுக்கான உதவி, தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் உட்பட ஏராளமான சேவைகளை வழங்கின.

இலங்கையில் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) தற்போதைய சூழல் தொடர்பாக ஆரம்ப கலந்துரையாடல்கள் பின்வரும் அம்சங்களை நிறுவின:

- தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) மிகவும் பொதுவாக முறைப்பாடு செய்யப்பட்ட வடிவமாக இணக்கமற்ற நெருக்கமான புகைப்படப் பகிர்வு (NCII) இருந்தது. குற்றம் செய்பவர் பெரும்பாலும் ஒரு ஆண், ஒரு முன்னாள் பங்குதாரர் அல்லது கைவிடப்பட்ட காதலர், அவர் பழிவாங்கும் எண்ணம் மற்றும்/ அல்லது பாதிக்கப்பட்டவருக்கு நற்பெயருக்கு தீங்கு விளைவிக்கும். பாலியல் பலாத்காரமும் தொடரலாம், பொதுவாக அதிக பொருள் அல்லது பாலியல் சலுகைகள் தேவை.
- நற்பெயருக்குக் கேடு விளைவிப்பதற்காகவும், பெண்கள் மற்றும் சிறுமிகளை துன்புறுத்துவதற்காகவும் பேஸ்புக்கில் போலி விவரங்களை உருவாக்குவது சமீப காலமாக அதிகரித்து வருகிறது. குற்றவாளிகள் தொடர்ந்து புதிய விவரங்களை உருவாக்கி, இடைவிடாத துன்புறுத்தல் பிரசாரத்தைத் தொடரும் சில சந்தர்ப்பங்களில் இது Cyber stalking - இணைய பின்தொடர்தல் (ஒருவரை துன்புறுத்துவதற்கு அல்லது பயமுறுத்துவதற்கு இலத்திரனியல் தகவல் தொடர்பாடல் முறையை மீண்டும் மீண்டும் பயன்படுத்துதல்) நிலையை எட்டியுள்ளது. இந்த பிரசாரங்களில் பாதிக்கப்பட்டவருக்கு எதிரான பாலியல் பலாத்காரம் மற்றும் அச்சுறுத்தல்களும் அடங்கும்.
- இணையத்திற்கு வெளியிலான கருத்து வேறுபாடுகள் மற்றும் பாலியல் துன்புறுத்தல் ஆகியவை பாதிக்கப்பட்டவரின் படங்களைப் பயன்படுத்துதல் மற்றும் தகவல்களை அடையாளம் காண்பது உள்ளிட்ட துன்புறுத்தல் பிரசாரங்களாக இணையத்தில் வெளிப்படலாம். மேலும், பணியிடங்களில் இணையத்திற்கு வெளியிலான பாலியல் முன்னேற்றங்கள் பயனற்றதாக நிரூபிக்கப்பட்டால், சக ஆண் ஊழியர்கள் இதுபோன்ற இணையத் துன்புறுத்தலுக்கு அடிக்கடி போலியான சுயவிவரங்களைப் பயன்படுத்தும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.
- சிறுமியர் மற்றும் பெண்கள் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினால் (TFSGBV) அதிகம் பாதிக்கப்படுகின்றனர். திறன் கைபேசிகளுக்கான அதிகரித்த அணுகல் மற்றும் விரிவான டிஜிட்டல் கல்வியறிவு என்பவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடு காரணமாக பெண் சிறுமியர் மற்றும் பருவமானவர் குறிப்பாக பாதிக்கப்படுகின்றனர்.
- பாலியல் வன்முறை பற்றிய கலாசார களங்கம் மற்றும் இணையவெளியைப் பயன்படுத்தும் பெண்கள் மற்றும் சிறுமிகளைப் பற்றிய பாலியல் கருத்துக்கள் ஆபத்தான முறையில் ஒன்றிணைகின்றன. பாதிக்கப்பட்டவர்கள் பெரும் அவமானத்தை உணர்கிறார்கள் மற்றும் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் தங்களுக்கு எதிரான வன்முறையில் அந்தரங்கமாக

இருப்பதைக் கண்டு பயப்படுகிறார்கள். சமூகங்கள் மற்றும் ஆதரவு வலையைமப்புக்களிலிருந்து பழிவாங்கல் மற்றும் ஒதுக்கிவைக்கப்படும் பயம் காரணமாக பெற்றோர்கள் கண்டுபிடித்து விடுவார்கள் என்ற பயம் குறிப்பாக இளம் பெண்கள் மற்றும் சிறுமிகளில் தீவிரமானதாக இருக்கின்றது.

- அவசரகால உதவி தொலைபேசி சேவைகள் இருந்த போதிலும், இவற்றின் மூலம் சேவைகளை அணுகுவது சிலருக்கு கடினமாக உள்ளது. அரச நிறுவனங்கள் திருப்திகரமான நிவாரணம் அல்லது ஆலோசனைகளை வழங்க முடியாத போது சிவில் சமூக அமைப்புகளை பாதிக்கப்பட்டவர்கள் பலர் அணுகுகின்றனர்.

- பெரும்பாலான பாதிக்கப்பட்டவர்கள் தங்களை குறிவைக்கும் உள்ளடக்கத்தை அகற்றுவதற்கான உதவியை நாடினாலும், சட்ட ஆலோசனைக்கான தேவையே இங்கே அதிக அளவில் உள்ளது. இருந்தபோதிலும், பாதிக்கப்பட்டவர்கள் குற்றவாளிகளுக்கு எதிராக முறையான சட்ட நடைமுறையைப் பின்பற்றுவதற்கு தயக்கம் காட்டுகின்றனர் அல்லது சட்ட அமுலாக்கத்தின் மூலம் சில நிவாரணங்களைப் பெறுகின்றனர். முறைப்பாடு செய்வது கடினமான செயலாக ஸ்ரீ கருதப்படுகிறது. பொலிஸாருடனான முந்தைய அனுபவத்தின் காரணமாக இந்த உணர்வு நேர்மறையான விளைவை ஏற்படுத்தவில்லை. பதிலளித்த ஒருவர் பின்வரும் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்:

  *'இணையத் துன்புறுத்தல் சம்பவம் தொடர்பாக நான் தனிப்பட்ட முறையில் முறைப்பாடு செய்துள்ளேன். அறிக்கை கொடுக்க என்னை அழைப்பதற்கு அவர்கள் 2 மாதங்கள் எடுத்துக் கொண்டனர். அதன்பிறகு, நான் சந்தித்த முதல் அதிகாரி, என் வழக்கிற்கு சட்டப்பூர்வ உதவி தேவைப்படாமல் போகலாம் என்று கூறினார். மொத்தத்தில், எனது அறிக்கையை அவர்கள் பதிவு செய்வதற்கு உட்பட, முழு செயல்முறைக்கும் 5 மணிநேரம் ஆனது. அதன் முடிவில், நான் அறிக்கையில் கையெழுத்திட வேண்டுமா என்று எனக்குத் தெரியவில்லை.'*

- இணையக் குற்றங்கள் மற்றும் இணையத் துன்புறுத்தலுக்குப் பொருந்தக்கூடிய சட்டங்கள் குறித்த அதிக அறிவு இன்மையானது, வழக்குகளைத் தொடர்வதற்கு பொலிஸார் தயக்கம் காட்டுவதற்கு காரணமாக இருக்கலாம் என்றும் பதிலளித்தவர்கள் குறிப்பிட்டனர்.

- சில அமைப்புகள் பாதிக்கப்பட்டவர்களுடன் முறைப்பாடு செய்வது போன்ற நடைமுறைகளுக்காக பொலிஸ் நிலையத்திற்குச் சென்றன, ஒரு சட்டத்தரணியின் பிரசன்னம், பொலிஸார் முறைப்பாடுகளைப் பெறும் மற்றும் பதிலளிக்கும் விதத்தை மேம்படுத்துகிறது என்பதை அவை குறிப்பிட்டன, மேலும், ஒரு நீண்ட செயல் முறையைத் தவிர்ப்பதற்காக விசாரணைக் கட்டத்தில் விடயத்தை தீர்ப்பதற்கும் முயற்சி செய்யப்படுகிறது.

- சட்ட அமுலாக்க நிறுவனங்களின் விரைவான நடவடிக்கை இன்மையால், பெரும்பாலான பெண்களும் சிறுமிகளும் துன்புறுத்தலைத் தவிர்ப்பதற்காக சுய தணிக்கை செய்தல் அல்லது தங்கள் தொலைபேசிகளை அணைத்து வைத்தல் போன்ற முறைகளை பின்பற்றுகின்றார்கள். இது தற்போதைய தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) பதிலளிப்பு முறைமையில் ஒரு தீவிர இடைவெளியை இது குறிக்கிறது, இது பெண்கள் மற்றும் சிறுமிகள் சம்பவம் தொடர்பில் அமைதியைப் பின்பற்றுவதற்கு வழிகோலுகின்றது.

## 4.3.2.1 பால்நிலைப்படுத்தப்பட்ட அணுகுமுறை

*'...பாதிக்கப்பட்டவர்களை குற்றம் சாட்டுவதில் மக்கள் ஈடுபடுவார்கள் என்ற அச்சம் அவர்களுக்கு உள்ளது. தங்களுக்கு நடந்த சம்பவங்களை வெளிப்படுத்தினால் அவர்கள் மீண்டும் பாதிக்கப்படுவார்கள் அல்லது மற்றவர்கள் அதனை தமக்கு எதிராக பயன்படுத்தலாம் என்பதும் அவர்களது அச்சமாக இருக்கின்றது. இத்தகைய விரும்பத்தகாத அனுபவங்களுக்கு சமூகம் பொதுவாக எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதன் காரணமான அவமானமும் அவர்களுக்கு உள்ளது. இந்த பொறிகளில் சிக்கிக் கொள்ளாமல் இருக்கவும், அவர்கள் எவ்வாறு சமூக ஊடகங்களை கவனமாகப் பயன்படுத்தலாம் என்பதையும் நாம் சமூகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.'*

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்குப் (TFSGBV) பதிலளிக்கும் போது அவர்களின் நிறுவனங்கள் பால்நிலை அணுகுமுறையை பின்பற்றுகின்றனவா என்று உறுப்பினர்களிடம் கேட்கப்பட்டபோது, அவர்களில் பலர் தங்கள் செயல்முறைகள் பற்றிய நுண்ணறிவுகளை வழங்கினர். இந்த அறிவின் மூலம் பல குறிப்பிட்ட படிகள் மற்றும் பரிசீலனைகள் தெரிவிக்கப்பட்டன:

- தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் (TFSGBV) பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் சிறுமியர் மற்றும் பெண்கள்.
- பாலியல் வன்முறை மற்றும் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றிய கலாசார மனப்பான்மை பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்கள் அவமானம் மற்றும் களங்கத்தை உள்ளகமயப்படுத்துவதற்கு வழிவகுக்கிறது, அத்துடன்,
- இணைய பாலியல் வன்முறை, டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் குறிப்பிட்ட சட்டங்கள் ஆகியவற்றின் அபாயங்கள் பற்றிய விழிப்புணர்வு இன்மையால், பாதிக்கப்பட்டவர்கள் பதிலளிக்கும் கட்டமைப்பில் விரிசல் விழுந்துவிடும் அபாயம் உள்ளது.

எனவே, பால்நிலைப்படுத்தப்பட்ட அணுகுமுறை பின்வருவனவற்றை உள்ளடக்கியது:

- முறையான சட்ட உதவியை நாடும்போது பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு சட்ட ஆலோசனை மற்றும் பிரதிநிதித்துவ வடிவில் உதவி வழங்குதல். பொலிஸ் நிலையத்திற்குச் செல்லும்போது பாதிக்கப்பட்டவர்களுடன் செல்வது, கூருணர்வுள்ள முறைப்பாட்டுச் செயல்முறைகளுக்காக பரிந்துரைப்பது மற்றும் சட்ட அமுலாக்க அமைப்பில் காணப்படும் அதிர்ச்சியளிக்கும் அம்சங்களை மேலும் குறைப்பதற்காக பாதிக்கப்பட்டவர் சார்பாக முறைப்பாட்டினை செய்வது என்பன இதில் அடங்கும்.
- விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பெண்கள் மற்றும் சிறுமிகள் தங்கள் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) அனுபவங்களுடன் முன்னேற ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துகின்றன. தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்குப் (TFSGBV) பதிலளிப்பதற்கான சாத்தியமான வழிகள் மற்றும் கிடைக்கக்கூடிய ஆதாரங்கள் பற்றிய தகவல் என்பன இதில் அடங்கும். சுய-தணிக்கைக்கு பதிலாக முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கு பெண்களை ஊக்குவித்து, அதிகாரம் அளிப்பதற்காக, சிக்கலான சூழலால் அறியப்பட்ட பால்நிலை - உணர்திறன் அணுகுமுறையும் குறிப்பிடப்பட்டது.
- தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) தொடர்பில் பணிபுரியும் பொலிஸார் மற்றும் பிற அரசு நிறுவனங்களுக்கு பால்நிலை உணர்திறன் பயிற்சிக்காக அதிகளவில் பரிந்துரைத்தல். ஒரு பெண் பொலிஸ்

உத்தியோகத்தர் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) முறைப்பாட்டிற்கு விரைவாகவும் திறமையாகவும் பதிலளித்த ஒரு நேர்மறையான சம்பவத்தை பதிலளித்தவர் ஒருவர் குறிப்பிட்டார், இந்த பொறியமைப்பில் பொலிஸாரை ஒரு முக்கிய செயற்பாட்டாளராக ஏற்றுக்கொள்வது முக்கியம் என்று அவர் நினைக்கின்றார்.

- சிறந்த பால்நிலை புரிந்துணர்வுடன் பிற சிவில் சமூக அமைப்புகளிடமிருந்து உதவி மற்றும் ஆலோசனையைப் பெறுதல். பாதிக்கப்பட்டவர்களின் அவலநிலையை உணர்ந்து அவர்களுக்கு உதவிகளை வழங்க இது உதவியாக இருக்கும் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

# 5 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) பதிலளிப்பு பொறியமைப்புகள்

## 5.1 பின்னணி

இணையக் குற்றங்கள் தொடர்பான சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பான ஒரே அதிகார சபையாக இருப்பதால், குற்றவியல் இயல்புடைய அனைத்து இணைய முறைப்பாடுகளும் இப்போது கணினி குற்றவியல் புலனாய்வுப் பிரிவுக்கு (CCID) அனுப்பப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் இலங்கைப் பொலிசுடன் இணைக்கப்பட்டுள்ள சிறுவர்கள் மற்றும் பெண்கள் உதவிச்சேவையானது வழக்குகளை தாங்களாகவே கையாள முடியும்.

கூடுதலாக இலங்கை கணினி அவசரகால தயார்படுத்தல் அணி (SLCERT), மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு, மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (NCPA) ஆகிய அனைத்தும் மேற்கூறிய இரண்டு நிறுவனங்களுக்கு தாங்கள் பெறும் எந்தவொரு வழக்குகளையும் திருப்பி விடுகின்றன. கணினி குற்றவியல் புலனாய்வுப் பிரிவு (CCID) பல துணை பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது, இதில் பின்வருவன அடங்கும்:

- சமூக ஊடக பிரிவு
- சமூக ஊடக விசாரணைப் பிரிவு
- உளவுத்துறை மற்றும் கண்காணிப்பு பிரிவு கொழும்பில் உள்ள அதன் தலைமையகத்தைத் தவிர, ஊஊஜனு ஆனது அம்பாறை, கண்டி மற்றும் மாத்தறையில் மூன்று பிராந்திய பிரிவுகளைக் கொண்டுள்ளது.

## 5.2 இரு-பகுதி அணுகுமுறை

சமூக ஊடக தளங்களில் இதுபோன்ற இணையத் துன்புறுத்தல் மற்றும் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) என்பவற்றைத் தணிக்கப் பயன்படுத்தக்கூடிய இரண்டு இணைய ஆளுகைக் கருவிகளைப் பற்றி ஸ்கொன்பெக், ஹெய்ம்சன், மற்றும் நாக்கமுரா (2020) ஆகியோர் பேசுகின்றனர். அவையாவன:

1. மேலிருந்து கீழான அணுகுமுறை: இந்த அணுகுமுறையில், டிஜிட்டல் தளம் தன்னை உருவாக்கி, இணையத் துன்புறுத்தல் மற்றும் வெளியிடக்கூடிய உள்ளடக்க வகை தொடர்பான கொள்கைகள் மற்றும் கட்டமைப்பை அமைக்கிறது.
2. கீழிருந்து மேலான அணுகுமுறை: இந்த அணுகுமுறையில், நடத்தை அளவுருக்கள் மற்றும் வெளியிடக்கூடிய உள்ளடக்கம் குறித்து பயனர்கள் தாங்களாகவே தளத்தை மிதப்படுத்துகிறார்கள். அவர்கள் இடுகையிடப்பட்ட உள்ளடக்கத்தின் மீது விழிப்புடன் இருப்பார்கள் மற்றும் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை (TFSGBV) உள்ளடக்கிய எந்தவொரு உள்ளடக்கத்தையும் முறைப்பாடு செய்கின்றனர்.


## 5.3 பேஸ்புக், இன்ஸ்டாகிராம் மற்றும் யூடியூப் என்பன தற்போது தங்கள் தளங்களை தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து (TFSGBV) பாதுகாப்பாக மாற்றுவதற்குப் பயன்படுத்தும் அறிக்கையிடல் கருவிகளைப் பார்ப்போம்.

### 5.3.1 பேஸ்புக் (Facebook)

கடந்த ஆண்டுகளில், பேஸ்புக் குழுவானது தமது பயனர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக போலி சுயவிவரங்களை நீக்கி வருகிறது. தீங்கிழைக்கும் உள்ளடக்கம் அல்லது சுயவிவரங்களைத் தடுக்க அவற்றின் வழிமுறைகள் உருவாக்கப்பட்டாலும், இந்த தளங்கள் சில விவரங்களை முழுமையாகப் புரிந்து கொள்ளாததால் சில நேரங்களில் அது தவறவிடப்படுகிறது. இதன் காரணமாக, பயனர்கள் பேஸ்புக்கில் சுயவிவரங்கள், இடுகைகள், கருத்துகள் மற்றும் பிற வகையான உள்ளடக்கங்களை நேரடியாக முறைப்பாடு செய்யலாம். பேஸ்புக்கில் எவ்வாறு முறைப்பாடு செய்யலாம்?


To report a profile:

1. Go to the profile that you want to report by clicking its name in your Feed or searching for it.
2. Click ··· to the right and select **Find support or report profile**.
3. To give feedback, click the option that best describes how this profile goes against our Community Standards, then click **Next**.
4. Depending on your feedback, you may then be able to submit a report to Meta. For some types of content, we don't ask you to submit a report, but we use your feedback to help our systems learn. Click **Done**.


To report a post:

1. Go to the post that you want to report.
2. Click ••• in the top right of the post.
3. Click **Find support or report post**.
4. To give feedback, click the option that best describes how this post goes against our Community Standards. Click **Next**.
5. Depending on your feedback, you may then be able to submit a report to Meta. For some types of content, we don't ask you to submit a report, but we use your feedback to help our systems learn. Click **Done**.

பேஸ்புக் உதவி மையத்தில் வழங்கப்பட்ட செயல்முறையின்படி உள்ளடக்கம் அல்லது சுயவிவரங்களை எவ்வாறு முறைப்பாடு செய்வது என்பதை மேலே உள்ள இரண்டு படங்களும் விளக்குகின்றன. கருவிக்கு மேலும் செல்ல, பேஸ்புக் ஒரு பயனர் அறிக்கையை சமர்ப்பிக்கக்கூடிய வகைகளின் பட்டியலை வழங்குகிறது.





**ஆதாரங்களை வைத்திருங்கள்:**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பேஸ்புக் அறிக்கையிடல் அமைப்புகளைப் பற்றி, உங்கள் முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கு முன், ஒரு புகைப்படம் / ஸ்கிரீன்ஷோட் (screenshot) ஊடாக உள்ளடக்கத்தின் ஆதாரம் அல்லது சுயவிவரத்தின் ஆதாரம் போன்றவற்றைப் படம்பிடிப்பது ஒரு சிறந்த நடைமுறையாகும்.

## 5.3.2 இன்டஸ்டாகிராம் (Instagram)

மெட்டா நிறுவன பிராண்டின் கீழ் மற்றொரு தளமாக இருப்பதால், இன்ஸ்டாகிராம் பேஸ்புக் போன்ற அதே அறிக்கையிடல் கருவியைப் பயன்படுத்துகிறது. புண்படுத்தும் உள்ளடக்கம் மற்றும் போலி சுயவிவரங்களை அகற்றுவதற்காக அல்கோரிதம் (algorithm) வடிவமைக்கப்பட்டிருந்தாலும், இயலிகள் (bots) அதை தவறவிடுகின்றன. எனவே பயனர்கள் சுயவிவரங்களையும் உள்ளடக்கத்தையும் கைமுறையாகத் தடுக்கலாம். ஒரு நபர் உருவாக்கக்கூடிய அல்லது ஏற்கனவே உருவாக்கிய சுயவிவரங்கள் மற்றும் எதிர்கால சுயவிவரங்களைத் தடுக்க அதன் பயனர்களை அனுமதிப்பதன் மூலம் இன்ஸ்டாகிராம் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது.


Instagram
How can we help?
Help Centre
Instagram Features
Manage Your Account
Privacy, Safety and Security
Policies and Reporting
Instagram for Businesses

Report Violations of our Community Guidelines

Please use this form to report content (ex: photos, videos) on Instagram that violates our Community Guidelines. When you report something, your information isn't shared with the person whose post or profile you're reporting.

Do you have an Instagram account?
Yes
No

Where does the violation that you're reporting appear?
Photo or video
Comment
An entire profile

How is this photo or video violating our guidelines?
Nudity or pornography
Violence or drug abuse
Self-harm or suicide

Click here if you wish to report harassment or bullying.

Your Instagram username (if applicable):
To find your username, we suggest using the web browser version of our site (instagram.com/[username])

Your email address:

Username of the person who posted the content that you are reporting:


Full name of the person who posted the content as listed on their account (optional):


Link(s) to the specific photo(s), violating profile(s), stories or comment(s) you're reporting

Do you know this person in real life? If so, please provide as much contact information for this person as possible.

Additional information:


Send




இன்ஸ்டாகிராம் ஒரு தனித்துவமான முறைப்பாட்டுப் பொறிமுறையைக் கொண்டுள்ளது. இன்ஸ்டாகிராம் உதவி மையத்தின் கீழ், வன்முறையை ஏற்படுத்தும் உள்ளடக்கம் அல்லது சுயவிவரத்தை எவ்வாறு முறைப்பாடு செய்வது என்பதற்கான வழிமுறைகள் வழங்கப்படுகின்றன. தளம் மூலம் நேரடியாகப் முறைப்பாடு செய்வதற்கு உங்களிடம் இன்ஸ்டாகிராம் கணக்கு இல்லையென்றால், இன்ஸ்டாகிராம் உதவி மையத்தின் கீழ் ஒரு செயல் முறையை வழங்குகிறது, அங்கு நீங்கள் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையில் (TFSGBV) விளைந்த உள்ளடக்கத்தின் ஆதாரத்தைச் சமர்ப்பிக்கலாம். முன்னர் குறிப்பிட்டபடி, எதிர்கால சுயவிவரங்களை உருவாக்கக்கூடிய பயனரையும் நீங்கள் தடுக்கலாம்.

## 5.3.3 யூடியுப் (Youtube)





யூடியுப் என்பது கூகுளுக்கு சொந்தமான காணொளி அடிப்படையிலான உள்ளடக்கத் தளமாகும். துன்புறுத்தல் மற்றும் இணைய மிரட்டல் கொள்கையின் கீழ், 'தனிநபர்களின் பாதுகாக்கப்பட்ட குழு நிலை (வயது, இனம், பால்நிலை அடையாளம் மற்றும் வெளிப்பாடு, பாலியல் நோக்குநிலை போன்றவை) அல்லது உடல் பண்புகள் உட்பட உள்ளார்ந்த பண்புகளின் அடிப்படையில் தனிநபர்களை குறிவைக்கும் உள்ளடக்கத்தை யூடியுப் பொறுத்துக் கொள்ளாது.'


# 6 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) பாதுகாப்பு பொறியமைப்புகள்

## 6.1 Unmochon (பங்களாதேஷ்)

உலகின் தென்முனையைச் சேர்ந்த பெண்கள் பெரும்பாலும் தங்கள் இணையத் துன்புறுத்தலுக்கு நியாயம் தேடுகிறார்கள், துன்புறுத்துபவர்களை வெளிக்கொணர்ந்து, துன்புறுத்தும் உரைகள் மற்றும் காட்சி உள்ளடக்கங்களின் திரைக்காட்சிகளை பொதுவில் வெளியிடுகிறார்கள். அதன்பின், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அவை அனுப்பி வைக்கப்படுகிறது. ஆயினும்கூட, அத்தகைய சான்றுகள் அதன் நம்பகத்தன்மைக்காக அடிக்கடி சவாலுக்குட்படுத்தப்படுகின்றன. பால்நிலையின் நீதியின் ‘அவமானம் சார்ந்த மாதிரியில் ‘Unmochon’ வடிவமைக்கப்பட்டுள்ளது. இது உண்மையான ஆதாரங்களைக் கைப்பற்றி, பாதிக்கப்பட்டவர்களுக்காக செயற்படும் குழுவுடன் பகிர்ந்து கொள்ளும் ஒரு கருவியாகும்.



# 7 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) பல்வேறு வகைகளை எவ்வாறு அடையாளம் காண்பது?




இந்த விளக்கப்படம் ஒருவர் எதிர்கொள்ளக்கக்கூடிய பல்வேறு வகையான தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினை (TFSGBV) கண்டறிவதற்கு உதவுகிறது. இந்த எளிமைப்படுத்தப்பட்ட முறை பயனருக்கு சில வகைகளை அகற்ற உதவுவதுடன், தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV)) பல்வேறு வகைப்பாடுகள் ஏன் இருக்க வேண்டும் என்பதற்கான நுணுக்கங்களைப் புரிந்துகொள்வதற்கும் உதவுகிறது.

# 7.1 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) காட்சி சார் அடையாளப்படுத்தல்

## 7.1.1 இணக்கம் பெறாது அந்தரங்க படங்களை (NCII) பகிரல்

**காட்சி:** ஒரு 15 வயது சிறுமி, தன்னுடன் உடலுறவில் இருக்கும் 16 வயது பையனுக்கு இணக்கத்துடன் தன்னைப் பற்றிய அந்தரங்கப் படங்களை அனுப்புகிறாள். உறவு இறுதியில் சிதைகிறது. 3 மாதங்களுக்குப் பிறகு, சில உள்;ர் வட்ஸ்அப் குழுக்களில் குறித்த சிறுமியின் அந்தரங்கமான படங்கள் பகிரப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அவள் தனது முன்னாள் நண்பரை எதிர்கொள்ளும் போது, யாரோ ஒருவர் தனது சாதனத்தை ஹேக் செய்து படங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

பிரதான அடையாளங்காட்டிகள்:

- அந்த பெண் சம்மதத்துடன் பையனுக்கு புகைப்படங்களை அனுப்பியிருந்தாலும், அதே படங்கள் பொதுவில் பரப்பப்படுவது இணக்கம் பெறப்படாத செயலாகும்.
- அவரது கைபேசியை ஊடுருவி செய்தது உண்மையாக இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம் என்றாலும், இணக்கமற்ற நெருக்கமான புகைப்படப் பகிர்வு (NCII) என்ற வகையின் கீழ் வரும்.
- ஒரு கைபேசியை பழுதுபார்ப்பதற்காகக் கொடுக்கும் போது ஒரு பொதுவான நிகழ்வு, தீங்கிழைக்கும் நோக்கத்துடன் ஒரு நபர் சாதனத்திலிருந்து நீக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை மீட்டெடுக்க, Undelete போன்ற மீட்பு நிரலை இயக்கலாம்.
- கைபேசி சமரசம் செய்யப்படும்போது மற்றொரு காட்சி நிகழ்கிறது மற்றும் கிளவுட்டில் காப்புப் பிரதி எடுக்கப்பட்ட அனைத்து உள்ளடக்கமும் (ஐகிளவுட், கூகுள் டிரைவ்) மூன்றாம் தரப்பினரின் கைகளுக்கு வரக்கூடும்.
- இது நடப்பதைத் தவிர்ப்பதற்கான சிறந்த வழி, ஐகிளவுட் அல்லது கூகுள் டிரைவ் சேமிப்பகத்துடன் காப்புப் பிரதி எடுப்பதைத் தவிர்ப்பது மற்றும் சாதனத்திலிருந்து நெருக்கமான படங்கள் அல்லது காணொளிகளை நிரந்தரமாக நீக்க ருனெநடநவந போன்ற மென்பொருளைப் பயன்படுத்துவதும் ஆகும்.

## 7.1.2 மாற்றியமைக்கப்பட்ட படங்கள்

**காட்சி:** ஒரு பெண் தனது புகைப்படங்களைப் பாராட்டி ஒரு தோரயமான பேஸ்புக் கணக்கிலிருந்து பேஸ்புக் செய்தியைப் பெறுகிறார். தாங்கள் ஒரு கலை இயக்குனர் எனத் தெரிவித்து, அவரது சில புகைப்படங்களில் சில கலைத் திருத்தங்களைச் செய்தால் பரவாயில்லையா என்று அந்த செய்தியின் ஊடாக கேட்கப்படுகிறது. அதிகம் யோசிக்காமல் அந்த பெண்ணும் சம்மதிக்கிறாள். சில நாட்களுக்குப் பிறகு, மற்றொரு கணக்கு அந்த பெண்ணுக்கு பேஸ்புக்கில் செய்தி ஒன்றை அனுப்பி, அந்தப் பெண்ணைப் பற்றிய அந்தரங்கப் படங்களை வெளியிடுவதாக மிரட்டுகிறது. இந்த இரண்டாவது கணக்கு தனது டிஜிட்டல் முறையில் மாற்றப்பட்ட புகைப்படங்களை அனுப்புகிறது, இதை அவர்கள் ஒரு ஆபாச தளத்தில் வெளியிடப் போவதாகவும், இணைப்பை அவரது

குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் அனுப்பப் போவதாகவும் கூறி அனுப்புகிறது.

பிரதான அடையாளங்காட்டிகள்:

- மென்பொருளைப் பயன்படுத்தி புகைப்படங்கள் மாற்றப்பட்டுள்ளன, அத்தகைய சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட மென்பொருளைப் பயன்படுத்துவதன் மூலம் அவை மாற்றியமைக்கப்பட்டவையா என்பதை அடையாளம் காண முடியும்.
- கையாளப்பட்ட படங்களை அடையாளம் காண நீங்கள் பயன்படுத்தக்கூடிய இணைய அடிப்படையிலான புகைப்பட தடயவியல் செயலிகள் பயன் படுத்தப்பட முடியும்
- பாதிக்கப்பட்டவர் இந்த வழக்கில் சமூகத் தளம்-அடிப்படையிலான நடவடிக் கையை எடுத்து, மாற்றியமைக்கப்பட்ட படம் குறித்து முறைப்பாடு தாக்கல் செய்யலாம்.

### 7.1.3 பொதுவாக தீங்கிழைக்கும் நோக்கத்துடன் இணையத்தில் (ஒரு குறிப்பிட்ட நபர்) பற்றிய தனிப்பட்ட அல்லது அடையாளம் காணும் தகவலைத்தேடி வெளியிடல் (Doxxing)

**காட்சி:** 5 வருட காதல் உறவுக்குப் பிறகு S மற்றும் V ஆகியோர் பிரிந்து செல்கிறார்கள், அதன் பிறகு S ஒரே பால்நிலையைச் சேரந்தவருடன் உறவைத் தொடங்குகிறார். ளு அவர்களின் காதலை மீண்டும் வளர்க்க விரும்பாததால் கோபமடைந்த V, ஒரு போலி சமூக ஊடக கணக்கைத் திறக்கிறார். V தனது முன்னாள் நண்பரின் குடும்பம், முதலாளிகள் மற்றும் நண்பர்கள் உட்பட பல நூற்றுக்கணக்கான நபர்களைச் சேர்க்கிறார். இந்தக் கணக்கின் மூலம், S இருபாலினத்தவர் என்பதை V வெளிப்படுத்துகிறார், மேலும் ளுஇன் சிறிய, தனிப்பட்ட சமூக ஊடகக் கணக்கில் மட்டுமே காணக்கூடிய ஒரே பாலின துணையுடன் ளு இன் முகவரி, தொலைபேசி எண்கள் மற்றும் படங்கள் போன்ற விவரங்களை இடுகையிடுகிறார். இதைத் தொடர்ந்து ளு மற்றும் புதிய துணை குடும்பம் மற்றும் நண்பர்கள் மற்றும் அந்நியர்களால் துன்புறுத்தலுக்கு உள்ளாகிறார்.

பிரதான அடையாளங்காட்டிகள்:

- முகவரி, தொலைபேசி எண் அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கம் போன்ற தனிப்பட்ட முறையில் அடையாளம் காணக்கூடிய எந்த தகவலையும் அனுமதியின்றி வெளியிடுதல்.

## 7.1.4 அச்சுறுத்தி பாலியல் நடவடிக்கையை அல்லது பணத்தை கேட்டல் (Sextortion)

**காட்சி:** ஒரு இளம் பெண், தான் ஒரு இளைஞன் என்று கூறிக்கொள்ளும் இணையத்தில் சந்தித்த ஒருவருடன் காதல் உறவைத் தொடங்குகிறார். இணைய உறவு உருவாகிறது, ஒரு நாள் காணொளி அழைப்பின் போது, அந்த ஆண் அந்தப் பெண்ணின் ஆடைகளில் சிலவற்றைக் கழற்றச் சொல்கிறான். முதலில் மறுத்தாலும் கடைசியில் அந்தப் பெண் மனம் தளருகிறாள். அடுத்த நாள், அந்த ஆண் அவளது மேலாடையற்ற உடலின் திரைக்காட்சிகளை காணொளி அழைப்பில் அனுப்புகிறான். மேலும் அவள் எப்போதாவது அவரைப் பிரிந்தால் அந்த புகைப்படங்களை அவளுடைய பெற்றோருக்கு அனுப்புவேன் என்று மிரட்டுகிறான். அந்த நபர் உண்மையில் நடுத்தர வயது மற்றும் திருமணமானவர் என்பதும் தெரியவந்துள்ளது. அவர் தனது படங்களை வெளியிடாததற்கு ஈடாக அந்தப் பெண்ணிடமிருந்து அதிக பாலியல் உதவிகளைக் கோருகிறார்.

பிரதான அடையாளங்காட்டிகள்:

- பாலியல் இயல்பு, பாலியல் சலுகைகள் அல்லது பணம் போன்ற படங்களை ஒருவர் வழங்கவில்லை என்றால், தனிப்பட்ட மற்றும் உணர்திறன் வாய்ந்த விடயங்களை விநியோகிப்பதாக அச்சுறுத்தல்.

## 7.1.5போலி விபரங்கள் மற்றும் ஆள்மாறாட்டம்

**காட்சி:** ஒரு பெண் தன் நண்பர்களால் அவருடையதைப் போன்ற இரண்டு போலி சுயவிவரங்கள் தொடர்பில் எச்சரிக்கப்படுகிறாள். அவை அவரது புகைப்படங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டவை, மேலும் ஒன்று சில தனிப்பட்ட விவரங்களுடன் அவரது பெயரில் உள்ளது. அந்த கணக்குகள் குறித்து முறைப்பாடு செய்யுமாறு அவர் பலரை அணுகுகின்றார். இந்த கணக்குகள் இறுதியில் தளத்தால் அகற்றப்படுகின்றன. ஒரு வாரம் கழித்து, மற்றொரு சுயவிவரம் தோன்றுகின்றது. அவள் அதை முறைப்பாடு செய்வதற்கு முன், குறித்த கணக்கு அவளைத் தடுக்கிறது. அடுத்த நாள், மற்றொரு புதிய சுயவிவரம் உருவாக்கப்பட்டுள்ளது, இந்த நேரத்தில் அவரது குணம் மற்றும் நற்பெயர் குறித்து அவதூறான கருத்துகளை அந்த கணக்குப் பரப்புகிறது. அடுத்த சில மாதங்களில் 20க்கும் மேற்பட்ட கணக்குகள் உருவாக்கப்படுகின்றன. முறைப்பாடு செய்து அகற்றினாலும், புதிய சுயவிவரங்கள் வெளிவருகின்றன, எப்போதும் அவளைத் தடுக்கின்றன.

பிரதான அடையாளங்காட்டிகள்:

- புகைப்படங்களில் உள்ள உண்மையான நபரைத் தவிர வேறு யாரோ தீங்கிழைக்கும் நோக்கத்துடன் சமூக ஊடக தளங்களில் சுயவிவரங்களை உருவாக்குகின்றனர்.

# 8 இலங்கை சட்ட அமைப்பில தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (TFSGBV) பதிலளிப்பு

## 8.1 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) சம்பந்தப்பட்ட சட்டங்கள்

இலங்கையில் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) குற்றங்களுக்கு குறிப்பாகப் பொருந்தக்கூடிய சட்டங்கள் எதுவும் இல்லை. தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) தொடர்பான குறிப்பிட்ட சட்டங்கள் இல்லாததால், தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்குத் (TFSGBV) தீர்வு காண சட்ட நடைமுறைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் பொதுவான தண்டனைக் குற்றங்களைச் சார்ந்திருக்க வேண்டும். இந்த பொதுவான தண்டனைக் குற்றங்கள், தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மேற்கொள்ளப்படும் முறைகள் மற்றும் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை (TFSGBV) வரையறுக்கும்

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மீது பால்நிலை மற்றும் குறுக்குவெட்டு தாக்கங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாது. இதன் விளைவாக, பெரும்பாலான சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்கள் மற்றும் குற்றவியல் நீதி அமைப்பில் உள்ள பிற நிறுவனங்கள் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) பால்நிலைக் கூறுகள் மற்றும் குறுக்குவெட்டுகளின் தாக்கங்கள் பற்றி முழுமையாக அறிந்திருக்கவில்லை. இதன் விளைவாக, இந்த நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுடன் தொடர்புடைய குற்றத்தின் பெரும்அதிர்ச்சிகரமான, உணர்திறன் மற்றும் அதிக ஆபத்தை (பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பிற்கான ஆபத்து உட்பட) மதிப்பிடத் தவறிவிட்டன, இது பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கான அவர்களின் பதில்களில் பிரதிபலிக்கிறது. ஒட்டுமொத்தமாக, தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) குற்றவாளிகளிடமிருந்து சட்டப்பூர்வ தீர்வுகள் மற்றும் பாதுகாப்பை அணுக முயற்சிக்கும் போது, பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு இந்த சிக்கல்கள் தடைகளை ஏற்படுத்துகின்றன.

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (TFSGBV) குறிப்பிட்ட சட்டங்கள் இல்லாத நிலையில், குற்றவியல் நீதி அமைப்பு தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) செயல்களைச் சமாளிக்க குற்றவியல் சட்டங்களின் பொது அமைப்பிலிருந்து சில சட்டங்களை ஏற்றுக்கொண்டது. பரந்த அளவில், அவ்வாறு பயன்படுத்தப்படும் சட்டங்கள் பின்வருமாறு:

1. குற்றவியல் சட்டத்தின் பிரிவு 285 - பிரிவு 286ஏ: ஆபாசமான பொருட்களை வெளியிடுதல் மற்றும் விநியோகித்தல்
2. குற்றவியல் சட்டத்தின் பிரிவு 345: பாலியல் துன்புறுத்தல்
3. குற்றவியல் சட்டத்தின் பிரிவு 372: மிரட்டி பணம் பறித்தல்
4. குற்றவியல் சட்டத்தின் பிரிவு 399: ஆள்மாறாட்டம் மூலம் ஏமாற்றுதல்
5. குற்றவியல் சட்டத்தின் பிரிவு 483: குற்றவியல் மிரட்டல்
6. ஆபாச பிரசுரங்கள் ஆணை எண்: 1927 இன் 4 (திருத்தப்பட்டது)

### 8.1.1.1 குற்றவியல் சட்டத்தின் பிரிவு 285 (திருத்தப்பட்டது)

இந்த குறிப்பிட்ட பிரிவு பொதுமக்களுக்கு ஆபாசமான வெளியீடுகளை வெளியிடுவதற்காக மேற்கொள்ளப்படும் பல்வேறு வகையான செயல்களைக் கையாள்கிறது. எந்தவொரு ஆபாசமான புத்தகம், துண்டு பிரசுரம், காகிதம், வரைதல், ஓவியம், புகைப்படம், பிரதிநிதித்துவம் அல்லது உருவம் ஆகியவற்றை விற்பனை செய்யும் அல்லது வாடகைக்கு எடுப்பதற்காக விற்பனை, விநியோகம், இறக்குமதி, அச்சிடுதல் ஆகியவற்றை இது தடை செய்கிறது. இது போன்ற ஆபாசமான பிரசுரங்களைக் காட்சிப்படுத்துவதன் மூலமும் அவற்றை விற்பனை செய்ய முயற்சிப்பதன் மூலமும் தெரிந்தே பொதுமக்களை அனுமதிப்பதையும் இந்தப் பிரிவு தடை செய்கிறது. இந்தக் குற்றத்திற்கான தண்டனையானது மூன்று மாதங்கள் வரை நீட்டிக்கப்படக்கூடிய ஒரு விளக்கத்தின் சிறைத்தண்டனை, அல்லது அபராதம் அல்லது அபராதம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டும் ஆகும்.

எனவே இந்த பிரிவு ‘பட அடிப்படையிலான பாலியல் துஷ்பிரயோகம் (IBSA)’ நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தப்படலாம். எவ்வாறாயினும், பிரிவு 285ஐப் பயன்படுத்துவதற்கு இருக்க வேண்டிய முக்கிய அம்சம் என்னவென்றால், பொதுமக்களுக்குக் கிடைக்கும் புகைப்படம் அல்லது ஆவணம் ஆபாசமான இயல்புடையது. எனவே, எடுத்துக்காட்டாக, பாதிக்கப்பட்டவரின் முகம் அல்லது ஆடை அணிந்த முழு உருவம் ஒரு நினைவுச் சின்னத்தில் பயன்படுத்தப்படும் சூழ்நிலைக்கு இந்த பிரிவு பொருந்தாது (வார்த்தைகளில் உள்ள அநஅந உள்ளடக்கம் ஆபாசமாக இல்லாவிட்டால்).

### 8.1.1.2 குற்றவியல் சட்டத்தின் பிரிவு 286 மற்றும் பிரிவு 286அ (திருத்தப்பட்டது)

பிரிவு 285 உடன் தொடர்புடைய குற்றச் சூழல்: பிரிவு 286 ஒரு நபர் ஒரு ‘ஆபாசமான பிரசுரத்தை’ (பிரிவு 285இல் அடையாளம் காணப்பட்டுள்ளபடி) விற்பதற்காகவோ அல்லது விநியோகிப்பதற்காகவோ அல்லது பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்காகவும் வைத்திருப்பதைத் தடுக்கிறது. பிரசுரம் ஆபாசமாக இருப்பதைத் தவிர, இங்குள்ள முக்கியப் பொருள் என்னவென்றால், குற்றவாளி அதை விற்க, விநியோகிக்க அல்லது பொதுமக்களுக்குக் கிடைக்கும் நோக்கத்துடன் தனது வசம் வைத்திருக்க வேண்டும்.

பிரிவு 286அ குழந்தைகளின் ஆபாசமான வெளியீடுகளைக் கையாள்கிறது. இது புகைப்படம் எடுப்பது, புகைப்படம் எடுக்க முயற்சிப்பது மற்றும் குழந்தைகள் தொடர்பான ஆபாசமான பொருட்களை விநியோகம் செய்வதை என்பவற்றை தடை செய்கிறது.

## 8.1.1.3 குற்றவியல் சட்டத்தின் பிரிவு 345

குற்றவியல் சட்டத்தின் பிரிவு 345 பாலியல் துன்புறுத்தலைத் தடைசெய்கிறது மற்றும் குற்றமாக்குகிறது:

1. குற்றவியல் சக்தியைப் பயன்படுத்தி அல்லது தாக்குவதன் மூலம் ஒரு நபரை பாலியல் ரீதியாக துன்புறுத்துதல்
2. வார்த்தைகள் அல்லது செயல்களைப் பயன்படுத்துவதன் மூலம் பாலியல்தொந்தரவு அல்லது துன்புறுத்தலை ஏற்படுத்துதல்

குற்றவியல் சட்டத்தின் 333வது பிரிவில் அடையாளம் காணப்பட்டுள்ளபடி, பாலியல் துன்புறுத்தல் அல்லது எரிச்சலை ஏற்படுத்தும் செயல், கற்பழிப்புக்கு சமம் இல்லாத எந்தவொரு செயலாகவும் இருக்கலாம் என்று குற்றத்திற்கான விளக்கம் திட்டவட்டமாக கூறுகிறது. இந்த பிரிவு மிகவும் பல்துறை மற்றும் TFSGBV வரம்பிற்கு தீர்வு காண ஏற்றுக்கொள்ளப்படலாம். எடுத்துக்காட்டாக, சமூக ஊடகங்கள் மற்றும் தகவல்தொடர்பு தளங்கள் மூலம் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவரை அச்சுறுத்துவது மற்றும் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவரை அவதூறு செய்யும் நோக்கத்துடன் மீம்கள் மற்றும் அவர்களது நற்பெயரை அழிக்கும் நோக்கம் கொண்ட சில குற்றங்கள் பிரிவு 345இலிருந்து பயனடையலாம். ஜூலை 2024 இல், பிரிவு 345 ஐ மேலும் வலுப்படுத்தும் வகையில், 'எந்தவொரு தகவல்தொடர்பாடல் மூலமாகவும்' (உதாரணமாக., பாலியல் வெளிப்படையான செய்திகள், படங்கள், ஒலிப்பதிவு/காணொளி போன்ற இலத்திரனியல் அல்லது இணையம் சார்ந்த துன்புறுத்துதல்) துன்புறுத்தலை வெளிப்படையாக உள்ளடக்கும் வகையில் ஒரு வரைவுத் திருத்தம் வரையறுத்து வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. மேலும், பாலியல் தொல்லை அல்லது துன்புறுத்துதலை ஏற்படுத்தக்கூடிய 'வார்த்தைகள் அல்லது செயல்களின் பயன்பாடு' என்பதன் அர்த்தம் என்ன என்பதை தெளிவுபடுத்துகின்றது.

மேற்கோள்:
கிரௌண்ட்வியூஸ்.ஒர்க் (Groundviews.org), 'பாலியல் தொந்தரவினை குற்றமாக்கல்: நாம் போதுமான அளவு செய்கிறோமா?' ('Criminalizing Sexual Harassment: Are We Doing Enough?') (2024) <https://groundviews.org/2024/08/20/criminalizing-sexual-harassment-are-we-doing-enough/ >accessed 01 September 2025.

## 8.1.1.4 குற்றவியல் சட்டத்தின் பிரிவு 372

இந்த பிரிவு 'பணப்பறிப்பு' பற்றி பேசுகிறது. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர் அல்லது மற்றொரு நபருக்கு தீங்கு விளைவிக்கும் அச்சுறுத்தலின் கீழ் மதிப்புமிக்க பாதுகாப்பாக மாற்றக்கூடிய மதிப்புமிக்க பொருட்கள் அல்லது ஆவணங்களைப் பெறுவதை இது குற்றமாக்குகிறது. இந்த பிரிவு அதன் பயன்பாட்டில் வரையறுக்கப்பட்ட நோக்கத்தைக் கொண்டுள்ளது. இருப்பினும், முன்னர் விவாதிக்கப்பட்டபடி, நபர்கள் பாலியல் பலாத்காரம் செய்வது மட்டுமல்லாமல், நிதி ஆதாயத்திற்காக சமரசம் செய்யும் படங்கள் அல்லது காணொளிகளையும் பயன்படுத்துகிறார்கள், இந்த விடயத்தில் இந்த பகுதியைப் பயன் படுத்தலாம்.

## 8.1.1.5 குற்றவியல் சட்டத்தின் பிரிவு 399

இந்த பிரிவு 'ஆள்மாறாட்டம் மூலம் ஏமாற்றுதல்' என்பதனை குற்றமாக்குகிறது. ஒரு நபர் வேறொருவரால் ஏமாற்றப்பட்டால், அவர் தெரிந்தே வேறு ஒருவராக நடிக்கிறார், அல்லது தெரிந்தே ஒரு நபரை இன்னொருவருடன் மாற்றுகிறார், அல்லது தன்னை வேறொருவராக பிரதிநிதித்துவப்படுத்துகிறார். சூழல் மற்றும் உண்மைகளைப் பொறுத்து Doxxing அல்லது போலி சுயவிவரங்கள் போன்ற குற்றங்களுக்கு இந்தப் பிரிவு பயன்படுத்தப்படலாம்.

## 8.1.1.6 குற்றவியல் சட்டத்தின் பிரிவு 483

பிரிவு 483 குற்றவியல் மிரட்டல் தொடர்பானது. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவரை குற்றவாளியின் விருப்பத்திற்கு இணங்க வற்புறுத்தும் வகையில், ஒரு நபர் அச்சுறுத்தும் மற்றும் பயமுறுத்தும் எந்தவொரு செயலையும் குற்றமாக்குகிறது.

## 8.1.1.7 1927ஆம் ஆண்டு 4ஆம் இலக்க ஆபாச வெளியீடுகள் கட்டளை

பிரிவு 2(2) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களை விவரிக்கிறது. பரவலாக, இது ஆணைச் சட்டத்தில் விவாதிக்கப்பட்டபடி, விற்பனை அல்லது விநியோக நோக்கத்திற்காக ஆபாசமான வெளியீடுகளை வைத்திருப்பதை குற்றமாக்குகிறது.

## 2024ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டம்

இந்தச் சட்டத்தின் (பிரிவு 3(இ)) நோக்கங்களில் ஒன்றாக, 'இந்தச் சட்டத்தின் கீழ் குற்றங்களைச் செய்ய, நிகழ்நிலை கணக்குகள் மற்றும் இயலிகளை (bots) தவறாக பயன்படுத்துவதை கண்டறியும், தடுக்கும் மற்றும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவது' என குறிப்பிடப்பட்டுள்ளது.

இச் சட்டத்தின் விதிகள் வெளிப்படையாக டி.எப்.எஸ்.ஜி.பி.வி -ஐ (TFSGBV) உள்ளடக்கியதாக இல்லாவிட்டாலும், டி.எப்.எஸ்.ஜி.பி.வி -ஆக (TFSGBV) விளக்கக்கூடிய சில விதிகள் உள்ளன. அவற்றில் பிரிவு 17 (நிகழ்நிலை மோசடி), பிரிவு 18 (நிகழ்நிலை ஆள் மாறாட்டம்), மற்றும் பிரிவு 20 (துன்புறுத்தலை ஏற்படுத்தும் அறிக்கைகளைத் தொடர்பாடல்) ஆகியவை அடங்கும்.

# 8.2 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) மீதான விசாரணைகளை நடத்தும் நிறுவனங்கள் மற்றும் அதிகார வரம்புகளுக்கு இடையேயான விசாரணைகளுக்கான கருவிகள்

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சின் (புமுர்ளு) முறைப்பாடுகளைக் கையாளும் குற்றவியல் நீதி அமைப்பில் உள்ள முக்கிய நிறுவனம் இலங்கை காவல் துறையாகும், ஏனெனில் அது சட்ட அமலாக்க மற்றும் விசாரணை அதிகாரங்களைக் கொண்ட நிறுவனமாகும்.

## 8.2.1 கணினி குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (CCID) என்றால் என்ன?

இலங்கை பொலிஸ் நிலையத்தின் இணையம் தொடர்பான குற்றங்களைக் கையாளும் பிரதான பிரிவு, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (CID) கீழ் நிறுவப்பட்ட கணினி குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (CCID) ஆகும். இருப்பினும், சிக்கலான இணையம் தொடர்பான வன்முறையை குறிப்பாக குற்றவாளி அறியப்படாத அல்லது மறைக்கப்பட்ட இடங்களில் விசாரிப்பதற்கு இந்தப் பிரிவு பயன்படுத்தப்படுகிறது. கணினி குற்றப் புலனாய்வுத் திணைக்களமானது (CCID) அனுமதிப்பட்டியலில் உள்ள மின்னஞ்சல் முகவரியை நிர்வகிக்கிறது (இது ஆரம்பத்தில் இலங்கை கணினி அவசரகால தயார்படுத்தல் அணியால் (SLCERT) நிர்வகிக்கப்பட்டது), இது அவர்களுக்கு பேஸ்புக் உடன் நேரடி தொடர்பை வழங்குகிறது. உள்ளடக்கத்தைத் தடுக்க அல்லது அகற்ற வேண்டிய வழக்குகள் இப்போது தொடர்புடைய இணைய இணைப்புகளுடன் கணினி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு (CCID) பரிந்துரைக்கப்பட வேண்டும். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (CID) பிரதி பொலிஸ் மாஅதிபரின் (DIG) கையொப்பத்தின் கீழ் விசாரணைகளை எளிதாக்க, பின்வரும் கோரிக்கைகள் மற்றும் உத்தரவுகளை நீதிமன்ற உத்தரவு இல்லாமல் செய்யலாம்:

1. குறிப்பிட்ட நபர்களை அடையாளம் காண்பது தொடர்பான தகவல்களுக்கு கைபேசி சேவை வழங்குநர்களுக்கான கோரிக்கைகள்.
2. குறிப்பிட்ட நபர்களின் கடவுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டை தகவலுக்கான நபர்களை பதிவு செய்வதற்கான திணைக்களத்திற்கு கோரிக்கைகள்
3. குறிப்பிட்ட நபர்களின் வெளிநாட்டுப் பயணத்தைத் தடைசெய்து குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரிக்கை.

## 8.2.2 உள்ளூர் பொலிஸ் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) முறைப்பாடுகளை பெற முடியுமா?

ஆம். அனைத்து உள்ளூர் பொலிஸ் நிலையங்களும் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) அல்லது நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) முறைப்பாடுகளை ஏற்க வேண்டும், ஏனெனில் குறிப்பாக தொலைபேசி எண், ஐ முகவரி அல்லது குற்றவாளி யாரெனத் தெரிந்தால் அவை இப்போது தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சைக் (GOHS) கையாளும் திறனைக் கொண்டுள்ளன. இந்தக் குற்றங்கள் தொடர்பான முறைப்பாட்டினை பொலிஸார் சாதாரண முறைப்பாடாகப் பதிவு செய்து, விசாரணையில் பின்பற்றப்படும் வழக்கமான நடவடிக்கை எடுக்கப்படும். எவ்வாறாயினும், விசாரணையின் போது, உள்;ர் பொலிஸ் நிலையம் அதைத் தாண்டி அவர்களால் தொடர முடியாத ஒரு கட்டத்தை அடைந்தால், எடுத்துக்காட்டாக, குற்றவாளி பயன்படுத்திய மேம்பட்ட தொழில்நுட்பம் காரணமாக, அவர்கள் விசாரணையை கணினி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு (CCID) அனுப்பலாம்.

## 8.2.3 பொலிஸ் நிலையத்தில் உள்ள பெண்கள் மற்றும் சிறுவர்கள் உதவி பிரிவுக்கு பங்கு உள்ளதா?

ஆம். பெண்கள் மற்றும் சிறுமிகளை நோக்கி தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) ஆகியவை பெண்களுக்கு எதிரான மீறல்களாக இருப்பதால், பெண்கள் மற்றும் சிறுவர்கள் பிரிவினால் கையாளப்பட முடியும். தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) தொடர்பான முறைப்பாடுகளை எந்த பெண்கள் மற்றும் சிறுவர்கள் பிரிவும் இப்போது கையாள முடியும் என்பது குறிப்பிடத் தக்கது. இந்த அலகுகள் இப்போது தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சின் (GOHS) விசாரணைகள் தொடர்பாக நீதிமன்ற உத்தரவுகளைப் பெறுவதற்கான திறன் கொண்டவையாக உள்ளன. கொழும்பைத் தலைமையிடமாகக் கொண்ட பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம், மேம்பட்ட மற்றும் சிக்கலான தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் நிகழ்நிலையில் நடைபெறும் பால்நிலை வெறுப்புப் பேச்சுக் (GOHS) குற்றங்களைக் கையாளும் ஆற்றல் மற்றும் திறன்களைக் கொண்டுள்ளது. பணியகத்தால் நீதிமன்ற உத்தரவுகளைப் பெறவும், அதை பேஸ்புக், இன்டஸ்டாகிராம் மற்றும் பிற ஒத்த சமூக ஊடகத் தளங்களுக்கு அனுப்பவும், பணியகத்தின் விசாரணைகளுக்கு உதவும் தகவல்களை வெளியிடக் கோரவும் முடியும். சிறுவர்கள் மற்றும் பெண்கள் பணியகமும் பேஸ்புக்குடன் அனுமதிப் பட்டியலில் மின்னஞ்சல் ஒன்றைக் கொண்டுள்ளது, அதன் மூலம் அவர்கள் முறைப்பாடுகளைத் தெரிவிக்கிறார்கள் மற்றும் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் பால்நிலைப்படுத்தப்பட்ட நிகழ்நிலை வெறுப்புப் பேச்சைச் (GOHS) செயல்படுத்தும் தளங்கள் மற்றும் சுயவிவரங்கள் தொடர்பாக மேலும் நடவடிக்கை எடுக்கிறார்கள்.

## 8.2.4 விசாரணைகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பை எவ்வாறு பெறுவது?

விசாரணைகளை நடத்துவதைப் பொறுத்தவரை, அமெரிக்காவில் உள்ள META இயங்குதளங்கள் அவற்றின் கடுமையான தனியுரிமை மற்றும் தரவுப் பாதுகாப்புச் சட்டங்களின் காரணமாகத் தகவல்களைக் கொண்டு வரவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும், இந்த சமூக ஊடக இயங்குதளத்தை இயக்கும் நிறுவனங்கள், பயங்கரவாதம் அல்லது சிறுவர் ஆபாசப் படங்கள் என வகைப்படுத்தப்பட்டாலன்றி, தனிநபர்கள் பற்றிய தகவல்களை வெளியிட சட்டத்தால் கட்டுப்படாது. எனவே, இந்த நிறுவனங்கள் செயல்படும் செயல்முறை பரஸ்பர சட்ட உதவி (MLA) திட்டமாகும். எவ்வாறாயினும், இது கடினமான மற்றும் அதிக நேரத்தை எடுத்துக்கொள்ளும், ஏனெனில் இதற்கு நான்கு முக்கிய அரசு நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது, அவை நீதி அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, கணினி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு (CCID) மற்றும் சட்டமாஅதிபர் திணைக்களம் என்பனவாகும். பால்நிலைப்படுத்தப்பட்ட நிகழ்நிலை வெறுப்புப் பேச்சைப் (GOHS) பொறுத்தவரை இது மேலதிக தடையாக உள்ளது. பெரும்பாலான சமூக ஊடக தளங்கள் இலாபத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்களாக இருப்பதால், அவை பயனரின் தனியுரிமை மற்றும் சுதந்திரத்தில் தலையிட விரும்புவதில்லை, எனவே, குறிப்பிட்ட உள்ளடக்கம் குற்றவியல் குற்றங்களை உருவாக்கக்கூடும் என்பதைக் காட்ட தெளிவான தகவல் தேவைப்படுகிறது.

ஆயினும்கூட, 2006ஆம் ஆண்டு முதல், குற்றவியல் குற்றம் தொடர்பான புடாபெஸ்ட் உடன்படிக்கையை (Budapest Convention on Cyber Crime) இலங்கை அங்கீகரித்ததன் விளைவாக, தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் பால்நிலைப்படுத்தப்பட்ட நிகழ்நிலை வெறுப்புப் பேச்சுக் (GOHS) குற்றவாளிகள் மற்றும் குற்றமிழைக்கும் வலையமைப்புக்கள் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கான ஒரு வழிமுறை உள்ளது. இந்த மாநாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைப்படுத்தல் பொறியமைப்பின் மூலம், இந்த மாநாட்டில் கையொப்பமிட்ட நாடுகளின் சட்ட நடைமுறைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் 24/7 செயலில் உள்ள மையப் புள்ளியை உருவாக்கியுள்ளனர், இதன் மூலம் அவர்கள் சட்ட நடைமுறைப்படுத்தல் விசாரணைகளுக்கு உதவுவதற்கு தகவல்களைப் பரிமாறிக்கொள்வார்கள். இலங்கையிலும் கணினி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் (CCID) நிர்வகிக்கப்படும் அத்தகைய 24/7 தொடர்புப் புள்ளி உள்ளது, இதன் மூலம் கணினி குற்றப் புலனாய்வுத் திணைக்களமானது (CCID) சர்வதேச அதிகார வரம்புகள் சம்பந்தப்பட்டிருக்கும் போது மற்றும் அதற்கு நேர்மாறாகவும் தகவல்களைக் கோர முடியும். கணினி குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (CCID), இந்த தளத்தின் மூலம், சந்தேகத்திற்குரிய குற்றவாளிகளின் வங்கிக் கணக்குகளை முடக்கவும், விசாரணைகளை எளிதாக்கவும், வங்கிக் கணக்கிலிருந்து செய்யப்பட்ட பரிவர்த்தனைகள் உட்பட குறிப்பிட்ட வங்கிக் கணக்குகள் பற்றிய தகவல்களைப் பெறவும் கோரலாம்.

எவ்வாறாயினும், இந்த வலையமைப்பு மூலம் பெறப்பட்ட அறிக்கைகள் நீதிமன்ற நடவடிக்கைகளில் எந்த ஆதாரப்பூர்வமான மதிப்பையும் கொண்டிருக்காது மற்றும் விசாரணை நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படலாம். நீதிமன்ற நடவடிக்கைகளில் சமர்ப்பிக்கக்கூடிய தகவல்களுக்கு பரஸ்பர சட்ட உதவி (MLA) ஒன்று தேவைப்படும்.

## 8.2.5 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் பால்நிலைப்படுத்தப்பட்ட நிகழ்நிலை வெறுப்புப் பேச்சு (GOHS) தொடர்பாக விசாரித்து நடவடிக்கை எடுக்கக்கூடிய பிற அரசு நிறுவனங்கள் உள்ளதா?

ஆம். குழந்தைகள் தொடர்பான தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் பால்நிலைப்படுத்தப்பட்ட நிகழ்நிலை வெறுப்புப் பேச்சுக் (GOHS) சம்பவங்களை நிவர்த்தி செய்வதில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கும் (ஹேீயு) பங்குண்டு. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (NCPA) நேரிலோ அல்லது 1929 அவசர உதவி சேவை இலக்கம் மூலமாகவோ முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (NCPA) அவர்களின் சொந்த பொலிஸ் விசாரணைப் பிரிவையும் கொண்டுள்ளது. மேலதிகமாக, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் (NCPA) தலைவருக்கு, தொடர்புடைய தொலைத்தொடர்பு நிறுவனங்களிடமிருந்து, தொலைபேசி எண்கள்/ஐபி முகவரிகள் மற்றும் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) மற்றும் பால்நிலைப்படுத்தப்பட்ட நிகழ்நிலை வெறுப்புப் பேச்சுக் (GOHS) குற்றவாளிகளின் இருப்பிடங்களைப் பெறுவதற்கான அடையாள விவரங்கள் விசாரணையின் நோக்கங்களுக்காகக் கோருவதற்கான அதிகாரம் உள்ளது. இத்தகைய தகவல்களை அணுகுவதற்கு நீதிமன்ற உத்தரவுகளைப் பெறுவதற்கு உள்ளூர் பொலிஸ் நிலையங்கள் பின்பற்ற வேண்டிய செயல்முறையுடன் ஒப்பிடுகையில் இந்த செயல்முறை விரைவானதும், வினைத்திறன் மிக்கதுமாகும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (National Child Protection Authority (NCPA)) 2024 ஆம் ஆண்டு இணைய கண்காணிப்பு மன்றம் (Internet Watch Foundation (IWF)), இலங்கை அறிக்கையிடல் தளத்தை (Sri Lanka Reporting Portal) நிறுவியது. இந்த தளம், தனிநபர்கள் நிகழ்நிலை சிறுவர் பாலியல் துஷ்பிரயோகச் (online child sexual abuse) சம்பவங்களை அனாமதேயான மற்றும் எளிதான முறையில் புகாரளிக்க ஊக்குவிக்கின்றது. இத்தகைய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டவர்களை மேலும் சேதத்திலிருந்து காப்பாற்ற உதவும் என்பதனால், புகாரளிப்பதன் முக்கியத்துவத்தை இந்தத் தளம் வலியுறுத்துகின்றது. பயனாளர்கள் விரைவாக புகாரளிக்க முடியும், மேலும் அநாமதேயம் உறுதி செய்யப்படுகின்றது. அதேசமயம், மின்னஞ்சல் முகவரியை வழங்கினால், புகாரின் முடிவுகள் குறித்து தொடர்ந்து அறிந்து கொள்ள முடியும்.

## 8.3 தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் (TFSGBV) பாதிக்கப்பட்டவர்களை முதல் பதிலளிப்பவர்களாகப் பெறுவதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் பொலிஸாரின் பங்கு

குற்றவியல் நீதி அமைப்பின் நிறுவனங்களும் பங்குதாரர்களும் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் எதிர்கொள்ள வேண்டிய பல்வேறு பிரச்சினைகளுக்கு உணர்திறன் கொண்டவர்களாக இருப்பது மிகவும் முக்கியமானதாகும். குறிப்பாக பொலிஸாரே முதலில் பதிலளிப்பவர்கள். பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் அவர்கள் மீது குற்றவியல் குற்றத்தை மட்டுமே எதிர்கொள்கின்றனர், ஆனால்

மனநலம், உடல் பாதுகாப்பு மற்றும் மறு - சமூகமயமாக்கல் தொடர்பான கரிசனைகள் போன்ற தொடர்ச்சியான ஒன்றோடொன்று தொடர்புடைய சிக்கல்களை அவர்கள் எதிர்கொள்கின்றனர். 2015ஆம் ஆண்டு 4ஆம் இலக்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு உதவி மற்றும் பாதுகாப்பளிக்கும் சட்டத்தின் பகுதி ஐஐ (பிரிவு 4) குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும்/அல்லது சாட்சிகளை எதிர்கொள்ளும் போது பொலிஸார் கடைபிடிக்க வேண்டிய சரிபார்ப்புப் பட்டியலை வழங்குகிறது. தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் (TFSGBV) பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுடன் பொலிஸார் கையாளும் இடத்திலும் இதே பட்டியல் பொருந்தும்.

## 8.3.1 ஆளொருவரின் கண்ணியத்திற்கு சமமான சிகிச்சை மற்றும் மரியாதை

2015ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான உதவி மற்றும் பாதுகாப்பு வழங்கும் சட்டத்தின் பிரிவு 3(அ) குறிப்பாக 'சமத்துவம், நியாயம் மற்றும் கண்ணியம் மற்றும் தனியுரிமையைப் பொறுத்து நடத்தப்படுவது பாதிக்கப்பட்டவரின் உரிமை' என்று கூறுகிறது. அத்தகைய பாதிக்கப்பட்டவர்.' பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள், எல்லா நேரங்களிலும், மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்தப்பட வேண்டும். அவ்வாறான சூழ்நிலைகளில் அவர்கள் பாதுகாப்பாகவும், ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், வசதியாகவும் உணரும் வகையில் நடத்தப்பட வேண்டும், மேலும் சட்ட அமைப்பில் அவர்கள் நம்பிக்கையை நிலைநிறுத்த வேண்டும். அந்த நோக்கததிற்காக, முறைப்பாட்டின் உணர்திறன் தன்மையைப் அறிந்து, பொலிஸ் நிலைய உத்தியோகத்தரிடமிருந்து விலகி, தனிப்பட்ட இடத்தில் முறைப்பாட்டினை எடுத்துக்கொள்வது நல்லதாகும். முறைப்பாடு செய்பவர் ஒரு பெண்ணாக இருந்தால், அவரை பொலிஸ் நிலையத்தில் உள்ள பெண்கள் மற்றும் சிறுவர்கள் உதவி பிரிவுக்கு அழைத்துச் செல்வது மற்றும் ஒரு பெண் பொலிஸ் உத்தியோகத்தர் அவரது அறிக்கையை எடுத்துக்கொள்வது அவசியமாகும்.

அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) முறைப்பாட்டை எடுத்துக்கொள்வதற்கான அதிகாரம் உள்ளது. ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்கும் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV) முறைப்பாட்டை ஏற்றுக் கொள்வதற்கும் அதை விசாரணை செய்வதற்கும் திறன் மற்றும் அதிகார வரம்பு உள்ளது. எனவே, முறைப்பாடு செய்பவர்கள் நியாயமற்ற முறையில் திருப்பி அனுப்பப்படாமல் இருப்பது மிக முக்கியமாகும். மேலும், அரசியலமைப்பின் 12வது பிரிவின் கீழ், அனைத்து நபர்களுக்கும் சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கான சம உரிமை உள்ளது, இது அவர்களின் முறைப்பாட்டை ஏற்றுக்கொண்டு விசாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், பொலிஸாருக்கு மேலதிக தொழில்நுட்ப உதவி தேவைப்படும் பட்சத்தில், இந்த விடயம் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் (CID) அல்லது அத்தகைய விசேட நிறுவனத்திற்கு பரிந்துரைக்கப்படலாம். தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) குற்றத்தால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு, குறிப்பாக பட அடிப்படையிலான பாலியல் வன்முறை/இணக்கமற்ற நெருக்கமான புகைப்படப் பகிர்வு (NCII), பொலிஸ் நிலையத்தை அணுகி தனது கதையைத் தெரிவிக்க மிகுந்த தைரியம் தேவை. எனவே, ஒரு பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு வரும்போது, அவர் திரும்பிச் செல்லாமல் இருப்பது மிகவும் முக்கியமாகும். பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவரை திருப்பிவிடுவது, அவர் மீண்டும் திரும்ப வேண்டும் அல்லது வேறு பொலிஸ் நிலையத்திற்குச் சென்று கதையைச் சொல்ல வேண்டியிருக்கும், இது அதிர்ச்சிகரமான மற்றும் நிதிசார்ந்து சவால் மிக்கதாக இருக்கலாம்.

## 8.3.2 பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்களை உறுதிப்படுத்தல்

2015 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 3(ஈ) பின்வருமாறு குறிப்பிடுகிறது: ‘பாதிக்கப்பட்டவர் சிறுவராக இருந்தால், சிறுவரின் சிறந்த நலனை உறுதிசெய்யும் வகையில் நடத்தப்பட வேண்டும்.’ இது சம்பந்தமாக, ஒருபுறம், சிறுவருக்கு அவர் பாதுகாப்பாகவும் வசதியாகவும் உணரக்கூடிய ஒரு அமைப்பு வழங்கப்படுவதை உறுதி செய்வது மிகவும் முக்கியமாகும். மறுபுறம், முதல் பதிலளிப்பவர் (பெரும்பாலும் பொலிஸார்) சிறுவரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, பிரதேச/மாவட்டச் செயலகத்தில் உள்ள நன்னடத்தை உத்தியோகத்தர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அலுவலரிடம் தெரிவிப்பது சிறந்தது. மேலும், 18 வயதுக்குட்பட்ட பெண் குழந்தையாக இருந்தால், சாதாரண உடையில் இருக்கும் பெண் பொலீஸ் உத்தியோகத்தரும், 18 வயதுக்குட்பட்ட ஆண் குழந்தையாக இருந்தால், சாதாரண உடையில் இருக்கும் ஆண் உத்தியோகத்தரும் முறைப்பாட்டினை எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு அமைதியான, வசதியான மற்றும் தனிப்பட்ட இடத்தை வழங்குவது பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் கதையை தெரிவிக்க ஊக்குவிக்கும் மற்றும் விரிவான அறிக்கையை பதிவு செய்ய உதவும்.

## 8.3.3 பக்கச்சார்பற்றவராக இருத்தல்: பாதிக்கப்பட்ட பெண்ணையும், தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு (TFSGBV) முகங்கொடுக்க நேரிட்ட வழிவகுத்த அவரது செயல்களையும் மதிப்பிடாதீர்கள்

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) குற்றங்கள் தொடர்பாக அனைத்து குற்றவியல் நீதித்துறை பங்குதாரர்களும் கடைப்பிடிக்க வேண்டிய இன்றியமையாத கொள்கை இதுவாகும். தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) குற்றங்களின் பின்னணியில், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவரின் ‘நடத்தை’ மற்றும் குற்றவாளியுடனான தொடர்புகளை மதிப்பிடுவது மிகவும் எளிதானது பரஸ்பர சம்மதத்தின் மூலம் நெருக்கத்தின் நிகழ்வுகளுக்கு வெளியே. அவமானம் மற்றும் அசௌகரியம், மனச்சோர்வு மற்றும் குற்றவாளியின் பயம் போன்ற காரணங்களுக்காக பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களே பொலிஸ் நிலையத்திற்கு வர போராடுகிறார்கள். பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர் மீது பொலிஸார் வெளிப்படையான சார்பு அல்லது அவநம்பிக்கையின் அணுகுமுறையை வெளிப்படுத்தினால், அது பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவருக்குத் தெளிவாகத் தெரியும், பின்னர் அவர் அவமானம் மற்றும் அமைப்பின் மீதான நம்பிக்கையின்மை காரணமாக நீதியைத் தேடுவதில் இருந்து விலகுவார். எனவே அவரது செயல்கள் குறித்து எந்தக் கருத்தையும் கூறாமல், அவரது கதையைக் கேட்டு பாரபட்சமின்றி விசாரணைகளை நடத்துவது முக்கியமாகும்.

## 8.3.4 பாதிக்கப்பட்டவர்களின் நிலையிலிருந்து புரிந்துகொள்ளுதல்

இந்த எளிய வழிகாட்டுதல் முக்கியமானது. பெரும்பாலான பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு கவலை நிறைந்துள்ளது. அவர்கள் இழப்பின் உணர்வை அனுபவிக்கிறார்கள் மற்றும் சில நேரங்களில் மனச்சோர்வடைந்துள்ளனர். சிலர் பயத்திலும் வெட்கத்திலும் மூழ்கியுள்ளனர். பலர் உணர்ச்சிகள் மற்றும் மன வேதனைகளுடன் போராடுகின்றனர். பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு ஆலோசனை அல்லது மனநல உதவி தேவைப்படுகிறது. இந்த தேவைகள் குறித்து உள்ளுணர்வுடனும், கருத்துக்களுடனும் இருப்பதுடன், ஆபத்தினை எதிர்கொண்டுள்ள பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவரை அடையாளங் காணக் கூடியவராகவும் பொலிஸார் இருக்க வேண்டியது மிகவும் முக்கியமாகும். முதலில் பதிலளிப்பவர்கள் பாதிக்கப்பட்டவருக்கு ஆலோசனை அல்லது மனநல உதவி தேவையா என்பதை அடையாளம் காண முடியும், மேலும் அவர்கள் பாதிக்கப்பட்டவரை மாவட்ட/பிரதேச செயலகத்தில் உள்ள ஆலோசனை உத்தியோகத்தரிடமோ அல்லது அருகில் உள்ள அரசு மருத்துவமனையின் மனநல சிகிச்சை பிரிவுக்கோ அனுப்ப வேண்டும். மேலதிகமாக, 2015 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 3(ந) இல் குற்றத்தால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு 'எந்தவொரு மன அல்லது உடல் காயம், தீங்கு அல்லது குற்றத்தினால் பாதிக்கப்பட்ட இயலாமைக்கு மருத்துவ சிகிச்சை பெற உரிமை உண்டு.' பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர் அறிக்கை கொடுக்கும்போது அவசரப்படுவதைத் தவிர்ப்பது அல்லது கேள்விகளைக் கேட்பதற்கு நபர் குறுக்கிடுவதைத் தவிர்ப்பதும் முக்கியம். அறிக்கை கொடுத்த பிறகு தெளிவுபடுத்தலாம். மேலும், பாதிக்கப்பட்டவர் அவர் விரும்பும் மொழியில் (சிங்களம் அல்லது தமிழ்) அறிக்கையை வழங்க அனுமதிப்பதும் முக்கியமாகும்.

## 8.3.5 பாரபட்சமற்ற மற்றும் உடனடி விசாரணை: பொருந்தும் குற்றவியல் நடவடிக்கைமுறை கோவை சட்டத்தின் விதிகள்

குற்றத்தின் உணர்திறனின் அடிப்படையில் அதற்கு உடனடி விசாரணை தேவைப்படுகிறது. சாட்சியங்களை கவனமாக சேகரித்து தேவையான இடங்களில் அவை இலக்கமிடப்படல் வேண்டும். மிக முக்கியமாக, தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) தொடர்பாக, போலி சுயவிவரங்களின் திரைக்காட்சிகள், சமூக ஊடக தளங்கள் மற்றும் தொலைத்தொடர்பு தளங்கள் வழியாக அனுப்பப்படும் செய்திகள், தொடர்புடைய புகைப்படங்கள், மீம்கள் போன்றவற்றை எடுக்க வேண்டும், ஏனெனில் குறிப்பாக முறைப்பாடு குறித்து அவருக்குத் தெரிவிக்கப்பட்டவுடன் குற்றவாளி சாட்சியங்களை அழிக்கும் வாய்ப்புகள் உள்ளன. குற்றவியல் நடவடிக்கைமுறை கோவை சட்டத்தின் பகுதி V, குற்றங்களின் விசாரணை தொடர்பான, தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் (TFSGBV)) விசாரணை மற்றும் சாட்சிய ஆணையில் உள்ள விதிகளுக்கும் பொருந்தும். 2015 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 3(g) இல் குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு 'ஒரு குற்றச் செயல் தொடர்பான முறைப்பாட்டை வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ முன்வைக்க உரிமை உண்டு. எந்தவொரு பொலிஸ் நிலையத்திலோ அல்லது பொலிஸ் நிலையத்தின் மற்ற பிரிவுகளிலோ அல்லது அலகுகளிலோ, அத்தகைய அறிக்கையை எந்த உத்தியோகத்தரும் பதிவு செய்து, அத்தகைய முறைப்பாட்டை சம்பந்தப்பட்ட விசாரணை உத்தியோகத்தரால் பாரபட்சமின்றி மற்றும் விரிவாக விசாரிக்க வேண்டும்.' 2015 ஆம்

ஆண்டின் 4ஆம் இலக்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தில் உள்ள விதிகள் குறித்து பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

# 9 முடிவுரை

சட்ட நடைமுறைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக முக்கிய நிறுவனங்கள், தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) முறைப்பாடுகளை நோக்கி அதிக சுறுசுறுப்பான அணுகுமுறையை மேற்கொண்டு வருகின்றன என்றாலும், குறைந்த வள ஒதுக்கீடுகளுடன் அதிகரித்து வரும் முறைப்பாடுகளை சமாளிப்பது வளர்ந்து வரும் சவாலாக உள்ளது.

ஆணாதிக்கச் சமூகத்தில் பாலியல் குற்றங்கள் தொடர்பான பிரச்சனைகளைச் சுற்றி நிலவும் கருத்துக்கள், பாதிக்கப்பட்டவர்களை அவமானப்படுத்துதல் போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்டவர்கள் சட்டப்பூர்வ நிவாரணம் பெறத் தயங்குவதுடன் இந்தக் காரணியும் இணைந்து தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை (TFSGBV) ஒரு முறையான பிரச்சினையாக மாற்றுவதற்கு பங்களித்துள்ளது. மேலும், பெரும்பாலான இணையக் குற்றங்கள் வெவ்வேறு பிராந்திய அதிகார வரம்புகளில் செயல்படும் வெவ்வேறு இணையத்தளங்களில் நிகழ்கின்றன, மேலும் மிகவும் பயனுள்ள பதிலளிப்பு முறையான சமூக-ஊடகத்தளத்தினால் நடவடிக்கை எடுப்பதற்கு இது பெரும் தடையாக உள்ளது.

குறிப்பாக தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை (TFSGBV) குற்றமாக்கும் இலங்கைச் சட்டங்களின் பற்றாக்குறையால் உருவாக்கப்பட்ட குறைபாடு, தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் போக காரணமாகிறது. இந்த சூழ்நிலை குற்றவியல் நீதி செயல்முறையை தாமதப்படுத்துகிறது, இதனால் நீதி தாமதப்படுத்தப்படுகிறது. மேலதிகமாக, சில சட்ட நடைமுறைப்படுத்தல் உத்தியோகத்தர்களின் இயலாமை மற்றும் சிலருக்கு

பயிற்சி இன்மையால், சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்கள் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) குற்றவாளிகளை நீதிமன்றத்தின் முன் கொண்டு வருவதற்கு தற்போதுள்ள தண்டனைச் சட்டங்களைப் பயன்படுத்தத் தவறிவிட்டனர்.

தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை (TFSGBV) வெற்றிகரமாக அணுகுவதற்கும், தடுப்பதற்கும், கிடைக்கக்கூடிய ஆதாரங்கள் மற்றும் கருவிகளைக் கொண்டு, டிஜிட்டல் தளங்களை எவ்வாறு பாதுகாப்பாகப் பயன்படுத்துவது என்பது பற்றிய புரிதலை பயனர் உருவாக்குவதன் மூலமும், தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினை (TFSGBV) குற்றங்கள் தொடர்பாக சட்ட அமலாக்க உத்தியோகத்தர்களால் தற்போதுள்ள தண்டனைச் சட்டங்களைப் பாராட்டுவதன் மூலமும் எட்டலாம்.

இருப்பினும், இது குறுகிய காலத்திற்கான ஒரு தேவையாகும். தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினை (TFSGBV) நேரடியாக அடையாளப் படுத்துவதற்கும், சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்களின் வலுப்படுத்தலுக்கும், பயிற்சிகள் ஊடாக சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்களின் உணர்திறன்படுத்தலுக்கும், நீண்ட கால மற்றும் தற்போதைய சட்ட மறுசீரமைப்புக்களின் தேவை குறித்து நாம் தொடர்ந்து கவனம் செலுத்தல் வேண்டும். இயலுமாயின், இலங்கையில் தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) பரவுவதனை தடுப்பதற்கு இளவயதிலேயே பயனர்களை இலக்கு வைத்து தொழில்நுட்ப ரீதியாக எளிதாக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFSGBV) குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும்கலந்துரையாடல்களுடன் மேலதிக வள ஒதுக்கீட்டினையும் மேற்கொள்ள வேண்டும்.

# 10

# உசாத்துணைகள்


வார்டு ஜெ மற்றும் லப்றினியெர் ஜெ, மனிதாபிமான நடவடிக்கையில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை தலையீடுகளை ஒருங்கிணைப்பதற்கான வழிகாட்டுதல்கள்: ஆபத்தை குறைத்தல், பின்னடைவை ஊக்குவித்தல் மற்றும் மீட்புக்கு உதவுதல்.
(நிறுவனங்களுக்கு இடையேயான நிலைக்குழு 2015)

க்ருக் ஈஜி மற்றும் பலர். (நனள), வன்முறை மற்றும் ஆரோக்கியம் பற்றிய உலக அறிக்கை (உலக சுகாதார அமைப்பு, 2002).

'பால்நிலை அடிப்படையில் தனிநபர்களுக்கு இடையேயான இணையதள மூலமான குற்றம்' (ருழேனுஊஇ பிப்ரவரி 2020)
<https://www.unodc.org/e4j/en/cybercrime/module-12/key-issues/gender-based-interper
ளழயெட-உலடிநசஉசைஅந.ாவஅடஇ அணுகப்பட்டது 05 மார்ச் 2023

டி மெல் என், பீரிஸ் பி மற்றும் கோமஸ் எஸ், 'பாலினத்தை விரிவுபடுத்துதல்: ஆண்மைகள் ஏன் முக்கியம்?: இலங்கையின் நான்கு மாவட்டங்களில் அணுகுமுறைகள், நடைமுறைகள் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை' (கேர் இன்டர்நேனல் ஸ்ரீலங்கா, 2013).

மக்கள்தொகை விடயங்களும் முக்கியமானது, 'இலங்கையில் பொது பேருந்துகள் மற்றும் ரயில்களில் பாலியல் துன்புறுத்தல்' (ருNகுPயு கொள்கை சுருக்கம், மார்ச் 2017) <https://sri lanka.unfpa.org/sites/default/files/pubpdf/FIAL%20POLICY%20BRIEF%20%20ENGLISH_0.pdf
அணுகப்பட்டது 05 மார்ச் 2023

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், 2020 'பெண்களின் நலன்கள் கணக்கெடுப்பு - 2019' <http://www.statistics.gov.lk/Resource/refference/WWS_2019_ Final_Report>

இலங்கை மருத்துவ சங்கம் (SLMA), இலங்கையில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பான ஆய்வு ஆதாரங்களின் மீளாய்வு (2011) பல்கலைக்கழக மானியக்
குழு (UGC), பால்நிலை சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் மற்றும் யுனிசெப்
இலங்கை அரச பல்கலைக்கழகங்களில் பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளின் பரவல் (2022).

கெம்ப் எஸ், 'டிஜிட்டல் 2022: இலங்கை' (தரவு அறிக்கை செயறகை நுண்ணறிவு, 15 பிப்ரவரி 2022) <https://datareportal.com/reports/digital-2022-sri-lanka> அணுகப்பட்டது 05 மார்ச் 2023.

குணசேகர டி, 'ஆன்லைன் பால்நிலை அடிப்படையிலான வன்முறை: பாலியல் துன்புறுத்தலின் புதிய இயல்பு' (தி மார்னிங், 28 பிப்ரவரி 2021) <https://www.themorning.lk/articles/121936, அணுகப்பட்டது 05 மார்ச் 2023

சேவ் தி சில்ட்ரன் மற்றும் பலர்., இலங்கையில் குழந்தைகளுக்கு எதிரான ஆன்லைன் வன்முறை (மார்ச் 2022) <https://srilanka.savethechildren.net/sites/srilanka.savethechildren.net/files/Online%20Violence%20Against%20Children%20in%20Sri%20Lanka.pdf>அணுகப்பட்டது 05 மார்ச் 2023.

சாமர எஸ் 'பாதுகாப்பற்ற பொதுவெளி மற்றும் பாதுகாப்பற்ற இணையதளம்' த மொர்னிங், 13 மார்ச் 2022) <https://www.themorning.lk/unsafe-outside-unsafe-online> அணுகப்பட்டது 05 மார்ச் 2023.

பொன்சேகா பி, 'குழந்தைகளின் ஆன்லைன் பாலியல் சுரண்டலின் வளர்ந்து வரும் ஆபத்துகள்' (கிரவுண்ட் வியுஸ், 20 நவம்பர் 2021) <https://groundviews.org/ 2021/11/20/the-growing-dangers-of-online-sexual-abuse-of-children/> அணுகப்பட்டது 05 மார்ச் 2023.

ஹப்புஆரச்சி, ப, 2021. 'சிறுவர் ஆபாச படங்களை தடுப்பதற்கான விசேட பொலிஸ் பிரிவு' (நேறளகசைளவஇ 29 ஜூலை 2021) <https://www.newsfirst.lk/2021/07/29/special-police-unit-tocrack- down-on-child-pornography/> mZfg;gl;lJ 05 மார்ச் 2023.

ஐரோப்பா கவுன்சில், பெண்கள் மற்றும் குடும்ப வன்முறைக்கு எதிரான வன்முறையைத் தடுப்பது மற்றும் எதிர்த்துப் போராடுவது தொடர்பான ஐரோப்பிய கவுன்சில் விளக்க அறிக்கை (கவுன்சில் ஆ/ப் ஐரோப்பா ஒப்பந்தத் தொடர் எண்: 210) UNGA 'பாலியல் நோக்குநிலை மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் தனிநபர்களுக்கு எதிரான பாகுபாடு மற்றும் வன்முறை: ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகத்தின் அறிக்கை' UN Doc A/HRC/29/23 (04 மே 2015).

பெண்களுக்கு எதிரான அனைத்துப் பாகுபாடுகளையும் நீக்குவதற்கான ஐக்கிய நாடுகள் குழு (CEDAW), CEDAW பொது பரிந்துரை எண். 19: பெண்களுக்கு எதிரான வன்முறை, 1992 <https://www.refworld.org/docid/52d920c54.html > அணுகப்பட்டது 27 ஜனவரி 2023.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையாளரின் அலுவலகம், சுதந்திரமாகவும் சமமாகவும் பிறந்தது: சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் பால்நிலை நோக்குநிலை, பால்நிலை அடையாளம் மற்றும் பால்நிலைப் பண்புகள் (2வது பதிப்பு, ஐக்கிய நாடுகள் சபை 2019)

'பால்நிலை அடிப்படையில் தனிநபர்களுக்கு இடையேயான இணையதள மூலமான குற்றம்' (ருழுேனுஊஇ பிப்ரவரி 2020) <https://www.unodc.org/e4j/en/cybercrime/module-12/key-issues/ பநனெநச-டியளநன-லைெநசிநசளழயெட-உலடிநசஉசைஅந.ாவஅட, அணுகப்பட்டது 05 மார்ச் 2023.

இலங்கையில் பெண்களும் புறக்கணிக்கப்பட்ட குழுக்களும் எதிர்கொள்ளும் தொழில்நுட்பம் வழியிலான வன்முறையைப் பற்றிய ஆய்வு - சுருக்கம் <https://srilanka.unfpa.org/en/publications/research-study-technology-facilitated-violence-experienced-women-and-marginalized-0>

சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (CEJ)

37/2 எலிபாங்க் வீதி, கொழும்பு 05, இலங்கை.
தொ. பெ./ தொலைநகல்: +94 11 2055404
www.cejsrilanka.org
srilanka.cej@gmail.com

/CEJ.SL | /cej_srilanka | /CEJ_SriLanka | /@CEJSriLanka

ISBN 978-624-5847-28-0

9 786245 847280